# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION

MARCH—1955

CONNEMARA PUBLIC LIBRARY
AUG 1956
MADRAS

1528






டாக்டர்-திரு. சோமசுந்தர பாரதியா

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94-95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

ASSOCIATION PUBLISHING HOUSE

"ARAMBA KALVI OFFICE"

94/95, New Street, Mannady P. O. Madras-1.

POST BOX NO. 1818

---

# "ஆரம்பக்கல்வி" இனம்

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில், எமது "புதுமுறை சங்க வாசகங்களை" அல்லது "வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை" பாட புத்தகங்களாக, அல்லது ரூ. 50–க்குக் குறையாமல் இதர பாட புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட், பஞ்சாயத்து, லேபர் ஆரம்பப் பாடசாலைகளுக்கு, "ஆரம்பக்கல்வி" மாதப் பத்திரிகையை இனமாக மாதாமாதம் அனுப்பிவைக்கப்படும்.

## புதுமுறை சங்க வாசகங்கள்

| | புத்தகத்தின் விலை | | | பேஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி : |
|---|---|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 | 4 | 0 | 19 | 19–5–'54 |
| இரண்டாம் வகுப்பு | 0 | 5 | 0 | 22 | 19–5–'54 |
| மூன்றாம் வகுப்பு | 0 | 7 | 0 | 23 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 8 | 0 | 23 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 9 | 0 | 23 | 19–5–'54 |

## வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 | 4 | 0 | 25 | 19–5–'54 |
| இரண்டாம் வகுப்பு | 0 | 5 | 0 | 25 | 19–5–'54 |
| மூன்றாம் வகுப்பு | 0 | 8 | 0 | 25 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 9 | 0 | 25 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 10 | 0 | 25 | 19–5–'54 |

## கதைப் புத்தகங்கள்

ஸ்ரீ (S. S. அருணகிரிநாதர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பாலர் நல்ல கதைகள்** | | | | | |
| நான்காம் வகுப்பு | 0 | 5 | 0 | 28 | 19–5–'54 |
| **பாலர் கதா போதினி** | | | | | |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 5 | 0 | 29 | 19–5–'54 |

# ஆரம்பக்கல்வி




PUBLIC LIBRARY

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் : பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணா.

மலர் 15 மார்ச் 1955 இதழ் 3

## வாரீர்! வாரீர்!
## அனைவரும் வாரீர்!

ஆயிரமாயிரமாக உள்ள ஆரம்பப் பள்ளி மானேஜர்களே!

ஆரம்பப் பள்ளிகளை நடத்திவரும் ஆசிரிய மானேஜர்களே!

எழுத்தறிவிக்கும் பணியைப் புரியும் எழில்மிகு செம்மல்களே!

வருங்காலத் தலைவர்களை உருவாக்கும் நிகழ்கால அறிஞர்களே!

வறுமையின் கொடுக்குகள் வாட்டங்கள் பல தந்தாலும் கல்விப் பணியினைக் கருத்துடன் செய்துவரும் தோழர்களே, தோழியர்களே!

வாருங்கள், வாருங்கள், எல்லோரும் வாருங்கள்.

கூட்டம் கூட்டமாக, அலை அலையாகத் திரண்டு வாருங்கள்.

சென்னை அழைக்கிறது மட்டற்ற மகிழ்ச்சியோடு—அந்த அன்பழைப்பை ஏற்க ஆர்வத்தோடு வாருங்கள்.

சென்னை நகரில், மெமோரியல் மண்டபத்தில், மார்ச் திங்கள் 27-ம் நாள் ஞாயிற்றுக் கிழமையன்று, சென்னை மாநில எயிடட் பள்ளிகளின் – ஆசிரிய மானேஜர்கள் – மானேஜர்களின் மாநாடு, மிகச் சிறப்பாக நடைபெற இருக்கிறது.

மாநாட்டிற்கு, செந்தமிழகத்தின் முதுபெரும் தலைவர் – 'தமிழ்நாடு' பத்திரிகை நடத்தித் தமிழ் மக்களைத் தட்டி யெழுப்பிய அண்ணல் - அஞ்சாத நெஞ்சமும் அசையாத உறுதியும் படைத்த அடலேறு **டாக்டர் வரதராஜுலு நாயுடு** அவர்கள் தலைமை தாங்குகிறார்கள்.

மாநாட்டைத் திறந்து வைப்பவரோ உழைப்பால் உயர்ந்த தன்மை படைத்தவர். எந் நாளும் மக்களோடு நெருங்கிப் பழகும் இயல்புகொண்டவர். தொண்டருக்குத் தொண்டராயும் தலைவருக்குத் தலைவராயும் ஒரே சமயத்தில் காட்சி தரும் ஒப்பற்ற சிறப்புடையவர், **முதலமைச்சர் காமராஜர்.**

ஆமாம் நண்பர்களே, பிரதமர் காமராஜர் திறந்துவைக்க, டாக்டர் நாயுடு தலைமை வகிக்க, ஆசிரியத் தோழர்கள் பலர் வீரவுரை நிகழ்த்த, சீரும் சிறப்பும் ததும்பிடும் வகையில் மாநாடு நடைபெற இருக்கிறது.

அத்தகைய மாநாட்டிலே கலந்து கொண்டு, உங்களுடைய கருத்துகளையும் பிறருடைய கருத்துகளையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டு, நாட்டிலே அலைமோதிக் கொண்டிருக்கும் நாலாவிதக் கல்விப் பிரச்சினைகளையெல்லாம் அலசி ஆராய்ந்து, திட்டவட்டமான முடிவுகளைச் செய்திடத்தான் உங்களை அழைக்கிறோம்.

சென்னை மாநிலத்தின் ஆரம்பக் கல்வித் துறையிலே, எயிடட் பள்ளிகள், மிகச் சிறப்பான இடம் பெற்றுள்ளன என்பதை எவரும் மறுத்திட இயலாது. அரசாங்கத்தார் மிகச் சில பள்ளிகளையே நடத்தி வருகிறார்கள். ஜில்லா போர்டுகள், முனிசிபாலிட்டிகள் முதலிய உள்ளாட்சி மன்றங்கள் ஒரு புறமும், எயிடட் நிர்வாகங்கள் மற்றோர் புறமுமாக இருந்துகொண்டுதான் ஏராளமான பள்ளிகளை நடத்தி வருகின்றன. இவற்றிற்குள்ளேயும், உள்ளாட்சி மன்றங்களால் நடத்தப்பட்டு வரும் பள்ளிகளின் எண்ணிக்கையைவிட எயிடட் நிர்வாகிகளால் நடத்தப்பட்டு வரும் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையே அதிகம். எயிடட் நிர்வாகங்கள் மட்டும் இல்லாமலிருந்

தால், இந்த நாட்டிலே, ஆரம்பக்கல்வி, இன்றையதினம் உள்ள அள வுக்கு, ஒருக்காலும் வளர்ந்திருக்காது.

இந்த உண்மையை நன்றாக அறிந்த காரணத்தால்தான், சென்னை கவர்னர் பிரகாசா அவர்கள், பலமுறை, எயிடட் நிர்வாகங் களுக்குத் தன்னுடைய மனமுவந்த பாராட்டுதல்களைத் தெரிவித் திருக்கிறார். கவர்னர் மட்டுமல்ல, கல்வியமைச்சர் சுப்ரமண்யம் அவர்களும், ஏனைய அமைச்சர்களும், அரசியல் தலைவர்களும், கல்வித் துறை நிபுணர்களும், பல்கலைக் கழகத் துணை வேந்தர்களும், ஏன், நாட்டின் நலன் நாடும் நல்லறிவாளர்கள் அத்தனை பேருமே, எழில் மிகு பணி புரிவன எயிடட் பள்ளிகள் என்பதை அழுத்தந்திருத்த மாக எடுத்து விளக்கியிருக்கிறார்கள்.

நியாயமாகப் பார்த்தால், எல்லா ஆரம்பப் பள்ளிகளையும் அர சாங்கத்தார்தான் தொடங்கி நடத்தியிருக்கவேண்டும். இங்கிலாந்து முதலிய நாடுகளில் அரசாங்கத்தார்தான் ஆரம்பப் பள்ளிகளை நடத்தி வருகின்றனர். ஆனால் இங்கே, அரசாங்கத்தாரிடம் போதிய பொருள் வசதியும் பிற வசதிகளும் இல்லாத காரணத்தால், இந்தப் பணியை அவர்களால் செய்திட இயலவில்லை. ஆனால் எயிடட் நிர் வாகிகள் இந்தத் துறையிலே துணிச்சலுடன் ஈடுபட்டு கல்விப் பணியைக் கருத்துடன் பரப்பலானார்கள். இன்றளவும் அந் நற் பணியை நன்முறையில் ஆற்றிவருகிறார்கள்.

இன்னமும் பல ஆண்டுகளுக்கு அவர்கள் இந்தப் பணியைத் தொடர்ந்து செய்யத்தான் வேண்டும். செய்தால்தான் எல்லோருக் கும் கல்வி என்கிற இலட்சியம் கைகூட முடியும். இந்தப் பள்ளிகள் அத்தனையையும் அரசாங்கத்தாரே இப்போது எடுத்துக்கொள்வது என்பது தேவையான பணியுமல்ல, நடக்கக்கூடிய காரியமுமல்ல. பள்ளிக்கூடம் போகவேண்டிய வயதுடையவர்களாய் ஆனால் பள்ளிக் கூடம் போகாமல் இருக்கும் நிலையினராய் நாட்டில் உள்ள பிள்ளைகள் ஏராளம். மொத்தம் உள்ள பிள்ளைகளிலே ஏறத்தாழ பாதிப்பேர் தான் இன்று பள்ளி செல்கின்றனர். மிச்சமுள்ள பாதிப்பேருக்குப் பள்ளிகள் இல்லை இதுபோது. இவர்களுக்கெல்லாம் பள்ளிகள் தேவை. தொடங்க வேண்டும் அரசாங்கம். ஆரம்பக் கல்விக்காகத் தன்னிடம் கிடைக்கக்கூடிய பணத்தையெல்லாம் புதிய பள்ளிகள் தொடங்கும் இந்தப் பொறுப்புள்ள பணியில்தான் அரசாங்கம் செலவிட்டாக வேண்டும். இதுதான் அவசரமும் அவசியமும் நிரம்பிய தொண்டு. இதனை விடுத்துவிட்டு இந்தப் பணத்தை, ஏற்கனவே நடந்துவரும் எயிடட் பள்ளிகளை, அரசாங்கப் பள்ளிகளாக மாற்றும் அவசியமற்ற பணியிலே செலவிடுவது முறையும் ஆகாது. விவேகமுள்ள செய

னும் அல்ல. எல்லாப் பிள்ளைகளுக்கும் தேவையான பள்ளிகளை ஏற்படுத்திவிட்ட பிறகு, அன்றைய நிலையில், அவசியப்பட்டால், எல்லாப் பள்ளிகளையும் ஒரே நிர்வாகத்தின்கீழ் அல்லது அரசாங்கப் பொறுப்பின்கீழ்க் கொண்டுவர, முயற்சி செய்யலாம். ஆனால் இப்போது அந்த முயற்சிக்குத் தேவையே இல்லை.

மாநாட்டிலே விவாதிக்கப்பட வேண்டிய மற்றொரு முக்கியமான பிரச்சினை, ஆரம்ப ஆசிரியர்களின் ஊதியத்தைப் பற்றியதாகும். "ஆரம்ப ஆசிரியர்களே அரும்பணி புரிபவர்கள்!"—எல்லோரும் சொல்கிறார்கள். "எழுத்தறிவிக்கும் இறைவர்கள் அல்லவா அவர்கள்!" அத்தனைப் பேரும் பாராட்டுகிறார்கள். "எண்ணென்ப, ஏனை எழுத்தென்ப, இவ்விரண்டும், கண் என்ப வாழும் உயிர்க்கு"—ஒவ்வொருவருமே அத் திருக்குறளை மனப்பாடம் செய்கிறார்கள். "யாதானும் ஊராமால்—நாடாமால்—என் ஒருவன்—சாந்துணையும் கல்லாதவாறு?"—கோபத்துடன் கேட்கிறார்கள் பலர். இப்படியெல்லாம் கல்வியைப் பற்றியும், அந்தக் கல்விப் பொருளை அள்ளி வழங்கும் ஆரம்ப ஆசிரியர்களைப் பற்றியும், நற்சான்றிதழ் வழங்குகிறார்கள் நல்லறிவாளர்கள் அத்தனை பேரும். மகிழ்ச்சிதான் நமக்கு இந்நிலை கண்டு. கல்வியின் அருமையையும், ஆசிரியர்களின் பெருமையையும் நாடு அறிந்துவிட்டதே என்பதைக் காண்கிறபோது மகிழ்ச்சிக் கதிரவன் ஒளி வீசாமலா இருப்பான்? வீசுகிறான். ஆனால் அடுத்த விநாடியே, ஆசிரியர்களின் ஊதியம் நம் கண்முன்னால் தோன்றுகிறது. உடனே மகிழ்ச்சி மங்கிவிடுகிறது. அதனிடத்தில், துயரம்—வெட்கம்—வேதனை—கண்ணீர் இத்தனையும் பிறந்துவிடுகின்றன. ஆரம்ப ஆசிரியர்களின் அருமை பெருமைகளை அழகான தமிழிலே அவசர அவசரமாகப் பேசிவிட்டு, அதே நேரத்தில், இன்றியமையாத தேவைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான வசதிகளைக்கூட அளிக்காமல் அவர்களை வாட்டி வதைக்கிறதே இன்றைய சமுதாயம், இதனை எண்ணிப் பார்க்கும்போது எந்த ஆசிரியத் தோழர்தான் வேதனைக் கண்ணீர் வடிக்காமல் இருக்கமுடியும்? நாம் பலமுறை தெரிவித்திருக்கிறோம். என்றைய தினம் ஆரம்ப ஆசிரியர்களின் வாழ்க்கையை வதைக்கும் வறுமை அழிக்கப்படுகிறதோ, என்றைய தினம் அவர்களுடைய முகத்திலே ஒரு புது ஒளியும் அகத்திலே ஒரு புது மகிழ்வும் பிறந்திடத் தேவையான வழியும் வகையும் செய்யப்படுகின்றனவோ, என்றைய தினம் அவர்களுடைய உள்ளத்தைக் குடையும் வாழ்க்கைத் துயரங்களுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கப்படுகிறதோ, என்றைய தினம் அவர்களுடைய அடிப்படைச் சம்பளம் ரூபா 75 என்றுவது ஆகிறதோ, அன்றைய தினம் தான் கல்வித்துறைக்கும் நல்ல காலம் பிறக்கும். நமது நாட்டின் முன்னேற்றத்திற்கும் வழி வகுக்கப்படும்.

ஆமாம்—ஆரம்ப ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்தத்தான் வேண்டும்—நியாயம்தான் அவர்கள் கேட்பது—அவர்கள் கேட்காமலே, கேட்பதற்கு முன்னரே, செய்திருக்கவேண்டிய செயல்தான் அது—மெய்தான்—ஆனால் பணம் இல்லையே சென்னை அரசாங்கத்திடம்—என்ன செய்வது, எப்படி உயர்த்துவது என்று சிலர் பேசக்கூடும். அந்தப் பேச்சிலே ஓரளவு நியாயமும் இருக்கிறது.

மாகாண அரசாங்கங்களுக்குச் செலவு ஏராளம். ஆனால் வரவோ குறைவு.

சின்னஞ் சிறு குழந்தைகள் முதல் கல்லூரிகளில் பயிலும் கட்டிளங் காளைகள் வரையிலே அனைவருக்கும் கல்வியை அளிக்கும் பொறுப்பு, மாகாண அரசாங்கங்களைச் சேர்ந்தது.

மருத்துவ மனைகள் பலவற்றை நடத்தி மக்களின் உடல் நலத்தைப் பாதுகாக்கும் பணியும் மாகாண அரசாங்கங்களால் செய்யப்பட வேண்டியதுதான்.

சாலைகள் அமைப்பது, பாலங்கள் போடுவது, விவசாயத்தை வளர்ப்பது—இந்தச் செயலும், மாகாண அரசாங்கங்களுடையதுதான்.

நாட்டின் அமைதியை நிலைநாட்டுவது, போலீஸை நிர்வகிப்பது, சிறைச்சாலைகளை நடத்துவது, நீதி மன்றங்களுக்குச் செலவிடுவது—இவ்வளவும் மாகாண அரசாங்கங்கள் செய்யவேண்டிய காரியங்கள்தான்.

செலவு இப்படியெல்லாம் ஏராளமாக இருக்கிறது மாகாண அரசியலாருக்கு. ஆனால், வரவோ, நிலவரி விற்பனை வரி ஆகிய இந்த இரண்டோர் வரிகளின் மூலமாகத்தான் கிடைத்தாக வேண்டும். விற்பனை வரியோ, ஏழைகளை வதைக்கும் தன்மை படைத்தது. எனவே அதனை அதிக அளவு உயர்த்தமுடியாது. நிலவரியைப் பற்றியோ சொல்லவேண்டாம்—மழை பொழியாத காலங்களில் எல்லாம் அது வஜா செய்யப்பட்டுவிடும்—மழை பொழியாத ஆண்டுகளோ, இங்கே ஏராளம்!

செலவும் அதிகம். வரவும் குறைவு. இது, மாகாண அரசாங்கங்களின் நிலைமை.

ஆனால் மத்திய அரசாங்கத்திடமோ, வரவு ஏராளம்.

ஆண்டுக்கு ஆண்டு வளரக்கூடிய தன்மை படைத்த பெரிய வரிகளை விதிக்கும் அதிகாரம் அவர்களிடம்தான் இருக்கிறது.

வருமான வரி,

கலால் வரி,

புகையிலை வரி,

ஏற்றுமதி இறக்குமதி வரி,

தபால் தந்தி இலாகா,

இரயில்வே நிர்வாகம்,

இவை ஒவ்வொன்றும் பல கோடி ரூபாய்களை ஆண்டுதோறும் வருமானமாக அளிப்பவை.

இத்தனைத் துறைகளும் டில்லியிடம் இருக்கின்றன.

ராணுவச் செலவு ஒன்றைத் தவிர வேறு முக்கியமான செலவு எதுவும் டில்லிக்குக் கிடையாது.

செலவு குறைவு, வரவு அதிகம்—இது டில்லியின் நிலை.

வரவு குறைவு, செலவு அதிகம்—இது, மாநில அரசுகளின் நிலை.

இந்த நிலை மாற்றப்பட்டாக வேண்டும்.

கலால் வரி, புகையிலை வரி, வருமான வரி, இந்த மூன்றையும் விதிக்கும் அதிகாரம், மாகாண அரசுகளுக்குக் கிடைத்தாக வேண்டும்.

இந்த வரிகளை வசூலித்து, அவற்றில் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை, மத்திய அரசுக்கு மாநில அரசுகள் தரலாமே தவிர, இவற்றை வசூலிக்கும் பொறுப்பும், வசூலில் பெரும் பகுதியைச் செலவிடும் உரிமையும், மாநில அரசுகளுக்குத்தான் இருந்தாக வேண்டும்.

இருந்தால்தான், ஆரம்ப ஆசிரியர்களுக்கு அதிக ஊதியம் தருவது உட்பட பல முக்கியமான செயல்களுக்குத் தேவையான பணத்தை மாநில அரசுகள் திரட்ட முடியும்.

இதுபோலவே, இந்த மாநாட்டில் அலசி ஆராயப்படவேண்டிய இன்னொரு பிரச்சினை, கல்வித் துறையில் அரசாங்கத்தின் தலையீடு என்பதைப் பற்றியதாகும். தொட்டதற்கெல்லாம், அரசாங்கம், கல்வித் துறையிலே தலையிடுவதென்பது இப்போதெல்லாம் சர்வ சாதாரணமாகிவிட்டது. இதனால் பலவகைக் குழப்பங்கள் கல்வி உலகில் ஏற்பட்டு, மாணவர்களின் கல்விக்கு ஊறு விளைகிறது. ஜன

நாயகக் கோட்பாடு நடைமுறையில் உள்ள எந்த நாட்டிலேயும் ஒவ்வோர் சமயத்திலே ஒவ்வோர் கட்சி ஆட்சிப் பீடத்தில் அமரக்கூடும். ஒவ்வோர் கட்சி அரசாங்கத்தை நடத்துகிறபோதும், அந்தந்தக் கட்சியின் கொள்கைகளுக்கு ஏற்ப கல்வித் திட்டத்தை மாற்றிக் கொண்டே இருப்பதானால், மாணவர்களின் எதிர்காலம் பாழாகி விடும் என்பது வெள்ளிடைமலை. அடிக்கடி ஏற்படக்கூடிய அரசாங்க மாறுதல்களால் மாறக்கூடிய பொருளாக இருக்கக்கூடாது கல்வி. அது அரசியல் பூசல்களுக்கு அப்பாற்பட்டதாக, நிலையான வாழ்வும் அமைதியான தன்மையும் படைத்ததாக, கல்வித்துறை நிபுணர்களால் உருவாக்கப்பட்டதாக இருக்கவேண்டும். கல்வித் துறையிலே அடிப்படை மாறுதல் ஏதேனும் செய்யப்பட வேண்டுமானால், அந்த மாறுதல் கல்வி நிபுணர்களின் ஒப்புதல் பெற்றதாக இருக்கவேண்டும். இதற்காகத்தான் நாம், 1938-ம் ஆண்டுக்கு முன் சென்னை மாநிலத்தில் இருந்ததைப் போன்ற கல்விக் குழுக்கள் (Education Councils) மீண்டும் ஏற்பட வேண்டும் என்று கூறுகிறோம். ஆரம்பக் கல்விக்கென ஒன்றும், உயர்நிலைப்பள்ளிக் கல்விக்கென ஒன்றும், ஆக இரண்டு கல்விக் குழுக்கள் ஒவ்வோர் மாவட்டத்திலும் ஏற்படவேண்டும். ஒவ்வோர் மாவட்டத்திலுமுள்ள அந்தந்தத் துறையைச் சேர்ந்த ஆசிரியர்கள், ஆசிரிய மானேஜர்கள் அல்லது மானேஜர்கள், கல்வி நிபுணர்கள் ஆகியோர் இந்தக்குழுக்களில் இடம் பெறவேண்டும். கல்வித் தொடர்பான எந்தப் பிரச்சினையையும் இந்தக் குழுக்களின் ஆராய்ச்சிக்கு அனுப்பி, அவற்றின் ஒப்புதலைப் பெற்ற பிறகே நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் அரசியலார்.

ஆரம்ப ஆசிரியர்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் இன்னமும் பலப்பல உள்ளன. அவற்றையெல்லாம் விவாதிக்க, விவாதித்து ஓர் முடிவுக்கு வர, வந்த முடிவைச் செயற்படுத்த, செயற்படுத்துவதன் விளைவாக ஆசிரியர்களின் நிலையை உயர்த்த, இத்தனைப் பணிகளையும் புரியத்தான், மாநாடு கூடுகிறது—மார்ச் 27-ல்—சென்னை நகரில்.

மாநாடு பற்றிய விவரங்கள் வேறோர் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

எயிடட் பள்ளிகளின் ஆசிரியர்களே, மானேஜர்களே, அருமை நண்பர்களே, அரும்பணி புரிபவர்களே, நாட்டின் நலன் நாடும் நல்ல உள்ளம் படைத்தவர்களே வாருங்கள் வாருங்கள் என மறுபடியும் அழைக்கிறோம்.

நம்முடைய மாகாண மாநாடு நடைபெற்றுப் பற்பல ஆண்டுகள் கழிந்து விட்டன. எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு ஒன்றாகச் சந்திக்கும் வாய்ப்பு இப்போதுதான் மீண்டும் கிடைக்கிறது. அதி

னும், ஆந்திர மாநிலம் தனியாகப் பிரிந்துவிட்ட பிறகு நமது மாநாடு கூடுவது இதுதான் முதல்முறை. அதோடு, ஆரம்பக் கல்வி பற்றிய பிரச்சினைகளையெல்லாம் அலசி ஆராய்ந்து முடிவறிப்பதற்காக டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்கள் தலைமையில் அரசாங்கத்தின் ஆய்வுக்குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவும் அதி தீவிரமாகப் பணியாற்றி வருகிற நேரம் இது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் கூடுகிறது மாநாடு—எனவே இதன் சிறப்பு எத்தகையது என்பதை நாம் விளக்கத் தேவையில்லை.

வாருங்கள்—சென்னை மாநாட்டில் சேருங்கள்—பிரச்சினைகளை யெல்லாம் அலசுங்கள்—நல்லதோர் முடிவைக் காணுங்கள்.

நினைவிருக்கட்டும்—மார்ச் 27-ல் சென்னை நகரில்—மாநில மாநாடு!

## கவலை மறைகிறது!
## களிப்பு பிறக்கிறது!

எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்வி என்கிற ஏற்பாடு எப்போது வருமோ என்று ஏங்கிக்கொண்டிருந்தோம்.

விடுதலை கிடைத்து எட்டு ஆண்டுகள் ஆகியும் இதற்கான பணி இன்னமும் தொடங்கப்படவில்லையே என்று கவலைப்பட்டிருந்தோம்.

இந்தப் பணியை முடித்திடாமல் வேறு எந்தப் பணியைச் செய்திட்டாலும் இந்தியா முற்போக்குப் பாதையில் விரைந்து செல்ல இயலாதே—என்றாலும் இந்தப் பணியில் விரைவு காணோமே என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தோம்.

இதோ, இந்தத் திங்கள், அந்தக் கவலை மறையவும், களிப்பு பிறக்கவும் தேவையான ஓர் வாசகம், நம் கல்வியமைச்சரிடமிருந்து புறப்பட்டிருக்கிறது.

புத்தாண்டு வரவு செலவுத் திட்டத்தைச் சட்டசபையில் சமர்ப்பித்திருக்கிறார் அமைச்சர் கனம் சுப்ரமணியனார். அந்த நேரத்தில் தான் அனைவர்க்கும் அகமகிழ்வு அளிக்கும் அந்தப் பொன்னான சேதியையும் தெரிவித்திருக்கிறார்.

**"மாதம் ரூபாய் நூறு அல்லது அதற்குக் குறைவான ஊதிய முள்ள பெற்றோர்களின் பிள்ளைகள், அடுத்த ஆண்டு முதல், எட்டாவது வகுப்பு அல்லது மூன்றாவது படிவம் வரை, சம்பளம் எதுவும் கட்டாமலே படிக்கலாம்.**

இந்த ஏற்பாட்டால் பள்ளிக்கூட நிர்வாகிகளுக்கு ஏற்படும் நஷ்டத்தை, அரசாங்கம் ஈடு செய்யும்.”

இதுதான் செய்தி.

இந்தச் செய்திகேட்டு, நாட்டுநலனில் நாட்டமுடைய எவர்தானாகட்டும், எப்படி மகிழ்வடையாமல் இருக்கமுடியும்?

சென்ற ஆண்டில் இதே வகையான ஓர் ஏற்பாட்டை, திருவாங்கூர் கொச்சி அரசாங்கம் மேற்கொண்டது. அப்போது நாம், “காலமும் கருத்தும்” என்கிற பகுதியில் பின்கண்டபடி எழுதியிருந்தோம்.

“இந்த நாட்டில் உள்ள அனைவரும் பணக்காரர்களல்ல. தங்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தேவையான கல்வியைத் தாங்களே தேடித் தரக்கூடிய வசதியும் வாய்ப்பும் பெற்றவர்களல்ல. போதுமான வருவாயும், நிம்மதியான வாழ்க்கையும் கொண்டிருப்பவர்களல்ல.

“அவர்களில் மிகப் பலர் மிகமிக ஏழைகள். வாழவழியில்லாமல் வாடிக் கிடப்பவர்கள். வறுமையின் கொடுக்குகளால் கொட்டப்பட்டு வேதனையின் அணைப்பிலே சுருண்டு கிடப்பவர்கள். அப்படிப்பட்டவர்களெல்லாம் கற்றறிந்து முன்னுக்கு வரவேண்டுமானால் நூற்றுக்கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் பள்ளிக்கூடங்களைத் திறந்துவிட்டால்மட்டும் போதாது. அந்தப் பள்ளிக்கூடங்களில் கல்வி, இலவசமாகப் பயிற்றுவிக்கப்படவேண்டும். இலவசமாகக் கொடுக்கப்பட்டால்தான் கல்வியை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியும். இல்லையேல் அவர்களுடைய உலகத்துக்கும் கல்வி உலகத்துக்கும்

...ய நீண்

1954-ஆம் ஆண்டு மே மாதம் வெளியான "ஆரம்பக்கல்வி" இதழிலே இதுபோலக் கேட்டிருந்தோம் நாம்.

அந்தக் கேள்விக்கு விடை இதுபோது கிடைத்துவிட்டது. இலவசக் கல்வி இங்கும் உண்டு என்கிற நிலை, நாமெல்லாம் மகிழும் வகையில் ஏற்பட்டுவிட்டது.

தமிழ்நாட்டு ஆரம்ப ஆசிரியர்கள் சார்பில், சென்னை அரசாங்கத்திற்கு, நமது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கவலை மறைகிறது—களிப்பு பிறக்கிறது—கல்வித்துறையிலே ஒரு புதிய ஒளி தென்படுகிறது—இதுவரை கல்வியைப் பெற முடியாதிருந்த பல ஏழைப் பிள்ளைகள் இனி அந்த அரிய வாய்ப்பை அடைய முடியும்—மிக மிக மகிழ்ச்சி.—இந்த நற்செயல் புரிந்த ஆட்சியாளர்கள், இதன் அடுத்த கட்டமாக, "ஆரம்ப ஆசிரியர்களின் ஊதியத்தைக் கணிசமான அளவு உயர்த்திவிட்டோம்" என்கிற இன்பத் தென்றலையும் நாட்டில் வீசவைக்கவேண்டும்.

மாணவருக்கும் பெற்றோருக்கும் மகிழ்ச்சி தந்திருக்கின்றனர் இதுபோது.

இனி, ஆசிரியர் உலகுக்குக் களிப்பூட்டவேண்டும் ஆட்சிப் பீடம்.

அதையும் செய்துவிட்டு, தேவையான அளவு புதிய பள்ளிகளையும் தொடங்கிவிட்டால், கல்வி, நம் தமிழகத்தில், எந்தப் பகுதியிலும் இன்பப் பவனி வரும் என்பதை யார் மறுக்கமுடியும்?

# காலமும் கருத்தும்

## அந்த நாள் என்று வரும் ?

நாகவான்!—அந்தப் பெயரைப் பலர் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள். ஆனால் கேள்விப் பட்டுவிட்டாலோ என்றென்றும் மறக்க மாட்டார்கள்.

நாகவான்!—அந்தச் சொல்லிலே வசீகரம் எதுவும் இல்லை. ஓரளவு அருவருப்பை அளிப்பதாகக்கூட இருக்கிறது அந்தச் சொல்லின் அமைப்பு. என்றாலும் தான் கூறுகிறோம். அந்தப் பெயரையும் அது பற்றிய விவரங்களையும் தெரிந்து கொண்டால் எவரும் அதனை எளிதில் மறந்து விட இயலாது என்று.

நாகவான் !—அது, வட நாட்டிலே, பாட்னா என்னும் நகரத்துக்கு அருகிலே உள்ள ஒரு கிராமம். மிகப் பெரிய கிராமம் கூட அல்ல. சின்னஞ் சிறு சிற்றூர். தேடித் தேடிப் பார்த்தாலும் அந்தக் கிராமத்தில் வாழ்பவர்களின் எண்ணிக்கை ஆயிரத்துக்கு மேல் போகாது. என்றாலும் அந்தச் சிறு ஊர், அதைப் பற்றிக் கேள்விப் படுபவர்களின் உள்ளத்தையெல்லாம் அள்ளிக் கொண்டு விடுகிறது.

நாகவான் !—அந்தக் கிராமத்திலிருக்கும் ஆண் பெண் இளையவர் முதியவர் அத்தனைப் பேரும் படிப்பறிவு உடையவர்கள் தானும். எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் ஒருவர் கூட அந்தக் கிராமத்திலே கிடையாதாம். கிராமத்தில் வாழ்பவர்கள் அத்தனைப் பேரும் படித்தவர்கள் என்பது மட்டுமல்ல. சென்ற நூறு ஆண்டுக் காலத்தில், ஒரு முறைகூட, அந்தக் கிராமவாசிகளில் ஒருவர்கூட, நீதி மன்றத்திற்குச் சென்றது கிடையாதாம். கிராமவாசிகளுக்குள் ஏதாவது தகராறு ஏற்பட்டால், அதனை, உள்ளூர்ப் பஞ்சாயத்து மன்றமே தீர்த்து விடுமாம். அந்த மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து வெளியூர்களில் உள்ள உயர்தர நீதி மன்றங்களுக்கு அவர்களில் எவரும் செல்வது கிடையாதாம்.

நாகவான் !—அங்கே ஓர் முதியவர் பள்ளி, ஒரு நூல் நிலையம், கிராம வாசிகள் கூடிப் பேச ஒரு பொது மண்டபம், சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்ய ஓர் இலக்கியக் கழகம், பெண்கள் பள்ளிக்கூடம், மருத்துவமனை, ஒழுங்காக அமைந்த அழகான வீதிகள், தற்கால முறையில் அமைந்த சாக்கடைத் திட்டம், இத்தனையும் உள்ளனவாம்.

நாகவான் !—அது, ஓர் இலட்சிய ஊர். எங்கெந்த முறையில், என்னென்ன வசதிகளோடு

அமைந்து, எப்படி எப்படி வாழ வேண்டுமென்று உலகப் பேராறிஞர்கள் கனவு கண்டு வருகிறார்களோ அப்படியெல்லாம் அமைந்து வாழ்கிறதாம். செய்திகள் அடுக்கடுக்காக வருகின்றன நாளிதழ்களில்.

மற்றைய செய்திகளெல்லாம் கூட இருக்கட்டும் ஒரு புறம்—நாகவானில் வாழ்பவர்கள் அத்தனைப் பேரும்—ஆமாம், **அத்தனைப் பேரும்** படித்திருக்கிறார்களாமே, அந்தச் சேதி ஒன்றே போதும் நாகவானுக்கு நம் உள்ளத்தில் நல்லதோர் இடத்தைப் பெற்றுத்தர.

இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும் அத்தனைப் பேரும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக ஆகவேண்டும் என்பது நம்முடைய கனவு. இந்திய அரசியல் திட்டம்கூட, அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்ட நாளிலிருந்து பத்தாண்டுக் காலத்திற்குள் இந்தக் கனவு நடைமுறை நாதமாக வேண்டுமென்று தெரிவித்திருக்கிறது. ஆனால் நாட்டிலே, கல்வியறிவு பரவி வருகிற வேகத்தைப் பார்த்தால், அந்தக் கனவு விரைவில் பலிக்குமென்று தெரியவில்லை. ஆனால் இதோ, நாகவான், தன்னைப் பொறுத்த வரையில், அந்த இலட்சிய பூமியை அடைந்துவிட்டது. தன் வரையில் எல்லோரும் படித்தவர்களே என்று பூரிப்போடும் பெருமையோடும் தெரிவிக்கிறது.

நம் நாடு முழுவதிலும் இத்தகு நிலை ஏற்பட வேண்டும். ஒவ்வோர் ஊருமே ஒரு நாகவானாக மாறவேண்டும். எவ்வூரிலும், எல்லோரும் படித்தவர்கள் என்கிற நிலை உருவாக வேண்டும். ஆமாம்—ஆனால் அந்த நாள் என்று வரும்? விரைவில் வருமா?

## வந்தே தீரும்! வரவழைத்தே தீருவோம்!

என்று வீர முழக்கமிடுகிறார் தோழர் **அக்பர் அலி** மேற்படி கேள்விக்கு விடையாக. நிமிர்ந்த மார்பும், திரண்ட தோளும், சுடர் வீசும் முகமும், ஒளி வீசும் கண்களும் படைத்த கட்டிளங் காளையல்ல அக்பர் அலி. தள்ளாடும் வயது—தடி ஊன்றும் பருவம்—தொண்டு கிழவர். என்றாலும் தான் வீர முழக்கமிடுகிறார்.

முழக்கம் வெறும் சொல்லளவில் இருந்தால் அதுபற்றி நாம் அதிகம் கவலைப்படமாட்டோம். பேசுபவர்கள் ஏராளம் இந்த நாட்டிலே. ஆனால் வீர முதியவர் அக்பர் அலியோ வெறும் சொல்லளவில் அல்ல, தன் செயல் மூலம் முழக்கமிடுகிறார். எனவே தான் அவர்தம் தன்மை கண்டு நாம் தனி மகிழ்வு அடைகிறோம்.

தோழர் அக்பர் அலி, வட நாட்டிலே, திரிபுரா மாநிலத்தில், தாளேஸ்வார் என்று உள்ள ஓர் கிராமத்தைச் சேர்ந்தவர். வயது 97. ஏழு பிள்ளைகள் இருக்

கிறார்கள் அவருக்கு. மூத்த பிள்ளையின் வயது 78. பேரன் பேத்திகளோ ஏராளமாக இருக்கிறார்கள்.

பழுத்த பழம், அக்பர் அலி எந்த நேரத்திலும் தரையில் விழுந்து விடக்கூடிய வயது. என்றாலும் அவருடைய ஆர்வம் குறையவில்லை. தொண்டு கிழவன்தான் நான் — என்றாலும் நான் படித்தே தீரவேண்டும் என்று உறுதி பூண்டுவிட்டார். கையிலே புத்தகத்தை எடுத்துக் கொண்டார். உள்ளூரில் இருக்கும் ஆரம்பப் பாடசாலையிலே ஒரு மாணவனாகச் சேர்ந்துவிட்டார்.

அதே பள்ளிக்கூடத்தில் அவருடைய பேரன் பேத்திகள் பலர் படித்து வருகின்றனர். அவர்களோடு சேர்ந்து நாமும் படிப்பதா—அதுகள் என்ன நினைக்கும் நம்மைப் பற்றி—கேலி பேசாவா என்றெல்லாம் எண்ணித் தயங்கவில்லை அக்பர் அலி. ஆரம்பப் பள்ளியிலே, பேரன் பேத்திகளுக்குப் பக்கத்திலே அமர்ந்து, தானும் அரிச்சுவடி பயிலத் தொடங்கிவிட்டார்.

"இன்றைக்கோ நாளைக்கோ மரணம் என்றிருக்கிறது இந்த நிலையில் உனக்கு ஏனையா படிப்பு?"

"காடு வா வா என்கிறது. வீடு போ போ என்கிறது. இந்த வயதில் ஏன் பெரியவரே பள்ளிக்கூட வாசம்?"

"இல்லை — தெரியாமல்தான் கேட்கிறேன் — இனிமேல் நீர் எழுத்தறிவு பெற்று எந்த உலகத்தையா புரட்டப்போகிறீர்?"

"ஏனையா அக்பர் அலி—பேரன் பேத்திகள் படிக்கிற இடத்திலே நீரும் படிக்கிறீரே, வெட்கமாக இல்லை?"

இப்படியெல்லாம்தான் பலர் கிண்டலையும் கேலியையும் கூர் அம்புகளென வீசியிருப்பர் அவர் மீது. ஏச்சும் பேச்சும் ஊரிலே நிச்சயம் புறப்பட்டிருக்கும். என்றாலும் தன் உறுதியிலிருந்து பிறழவில்லை. கல்வியறிவு பெறுவது என்கிற நோக்கத்திலிருந்து தவறவில்லை. பள்ளிக்கூடம் போகிறார், பாடமும் பயில்கிறார். வயதோ—நினைவிருக்கட்டும்—97.

இந்த நெஞ்சு உரமும் கொள்கை உறுதியும் நாட்டில் எல்லோருக்கும் ஏற்படவேண்டும். ஏற்பட்டுவிட்டால், எல்லோரும் கற்றவரே இந்த நாட்டில் — அதிலென்ன ஐயம்?

**அது அங்கே!**

**ஆனால், இங்கே?**

ஹிந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட மக்கள் வாழும் பகுதியில் உள்ள அலகாபாத் பல்கலைக் கழகம், ஏற்கெனவே, பி. ஏ., பி. எஸ்ஸி ஆகிய வகுப்புகளின் இறுதித் தேர்வை எழுதுபவர்கள், ஹிந்தி மொழியில் வேண்டுமானாலும் தங்கள் விடைகளை எழுதலாம் என்று அறிவித்திருக்கிறது. இந்த ஆண்

டில், அந்தப் பல்கலைக் கழகத்தின் அகடமிக் கவுன்சில், அதே வகைச் சலுகையை எம். ஏ. தேர்வுக்கு விட்ட எழுதுபவர்களுக்கும் அளிக்கலாம் என்று முடிவுசெய்திருக்கிறது. கேள்வித்தாள் ஆங்கிலத்தில் தயாரிக்கப்படுமாம். ஆனால் விடைகள், ஆங்கிலத்திலோ அல்லது ஹிந்தியிலோ—மாணவர் எதை விரும்புகிறாரோ அந்த மொழியில் தரப்படலாமாம்.

ஹிந்தி மொழியை விரைவில் வளர்ப்பதற்காக அந்த மொழி வழிப் பகுதியில் உள்ள பல்கலைக் கழகம் இத்தகு ஏற்பாட்டை மேற்கொண்டிருக்கிறது. இந்நிலையில், தமிழ்ப்பகுதியில் உள்ள சென்னைப் பல்கலைக் கழகமும் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும், இதுபோலவே, மாணவர்கள், ஆங்கிலம் அல்லது தமிழ் மொழியில் தங்கள் விடைகளை அளிக்கலாம் என்று ஏன் ஏற்பாடு செய்யக்கூடாது? அலகாபாத் பல்கலைக் கழகம் ஆங்கிலத்திற்குப் பதிலாக ஹிந்தி என்கிற ஏற்பாட்டில் ஈடுபடுகிறபோது, சென்னை—அண்ணாமலை—மன்றங்கள், ஆங்கிலத்தின் இடத்தில் தமிழ் என்கிற சீரிய முடிவை எடுக்க ஏன் தயங்கவேண்டும்?

கேள்வித்தாள் ஆங்கிலத்தில்! ஆனால் விடைகள் தமிழ் அல்லது ஆங்கிலம் எது வேண்டுமானாலும்! என்கிற முடிவுக்குத் தமிழ் நாட்டில் உள்ள இந்த இரு பல்கலைக் கழகங்களும் உடனடியாக வருவதே முறை.

இதை உடனே செய்யவேண்டும்—ஆனால் இதைமட்டும் செய்தால் போதாது. மிக விரைவில், தமிழ் நாட்டில் உள்ள எல்லாக் கல்லூரிகளிலும், தமிழ் மொழியிலேயே எல்லாப் பாடங்களையும் பயிற்றுவிப்பது என்கிற நிலையை ஏற்படுத்தவேண்டும். சென்னை, அண்ணாமலைக் கழகங்களின் தலையாய கடமை இது.

உயர்நிலைப் பள்ளிகளில், எல்லாப் பாடங்களும்—தமிழ்மொழியில்தான் பயிற்றுவிக்கப்படுகின்றன. மாணவர்கள் அங்கிருந்து கல்லூரி சென்றதும் எல்லாப் பாடங்களும் அங்கே ஆங்கிலத்தில் பயிற்றுவிக்கப்படுவதைக் காண்கிறார்கள். திகைக்கிறார்கள். இந்த மொழி மாறுதல் காரணமாக, மாணவர்கள், கல்லூரிக் கல்வியை விரைவில் படிக்க இயலாமல் போகிறது. மாணவர்களுக்கு ஏற்பட்டுவரும் இந்தப் பெருந் தொல்லை தொலையவேண்டுமானால், கல்லூரிக் கல்விப் பயிற்சி மொழி தமிழ்மொழியாக மாற்றப்பட்டே ஆகவேண்டும்.

மாணவர்களின் நலன் மட்டுமல்ல, தமிழ் மொழியின் வளர்ச்சி, தமிழ் நாட்டின் தன்மானம், தமிழ் மக்களின் முன்னேற்றம் ஆகிய கண்ணோட்டங்களிலிருந்து பார்த்தாலும், இந்த மாறுதல், இன்றியமையாத தொன்று என்பது தெளிவாக விளங்கும்.

தமிழ்நாட்டிலே, தமிழ்மொழி, பயிற்சி மொழியாக இல்லாமல்

இன்னோர் மொழி இருப்பதா? இதைவிட அவமானம், ஒரு தமிழனுக்கு, வேறென்ன இருக்க முடியும்?

தமிழ்நாட்டுக் கல்லூரிகளில் தமிழ் பயிற்சி மொழியாக இருக்கவேண்டியது நியாயம் தான். ஆனால் விஞ்ஞானம் பொருளாதாரம் அரசியல் கணக்கு நூல் போன்ற பல்வேறு பாடங்களுக்குத் தேவையான புத்தகங்கள் தமிழில் இல்லையே, இங்கிலையில் தமிழ் பயிற்சிமொழி யாவதெப்படி என்று சிலர் கேட்கக்கூடும்.

தேவையான புத்தகங்கள் இல்லையென்றால், சென்னை—அண்ணாமலை—இரு பல்கலைக் கழகங்களும் கூட்டாகச் சேர்ந்து, கமிட்டி ஒன்றை அமைத்து, ஓர் ஐந்தாண்டுத் திட்டம் வகுத்து, புத்தகங்களை ஐந்து ஆண்டுகளுக்குள் வெளியிடுவது என்றும், ஆறுவது ஆண்டிலிருந்து தமிழ் பயிற்சி மொழியாகும் என்றும் அறிவிப்பதுதானே முறை! அதை விட்டு விட்டு, புத்தகங்கள் இல்லை— ஆகவே தமிழைப் பயிற்சிமொழியாக்க இயலாது என்கிற பழம் பல்லவியையே மீண்டும் மீண்டும் பாடிக்கொண்டிருப்பதால் என்ன நன்மை?

இரண்டு பல்கலைக் கழகங்களும் உடனே இத்துறையில் ஈடுபடவேண்டும். இது, தமிழகத்தின் ஆசை; தமிழ் மக்களின் வேண்டுகோள்; தமிழ்மொழிக்குச் செய்யப்படவேண்டிய கடமை; தமிழ் மாணவர்களின் முன்னேற்றத்திற்காக ஆற்றப்படவேண்டிய தொண்டு.

## நெஞ்சிலே நெருப்பு!

விஷம்போல ஏறிக்கிடக்கும் விலைவாசிகளை தங்களுக்கு அளிக்கப்படும் மிகக் குறைந்த ஊதியத்தைக் கொண்டு எட்டிப் பிடிக்க முடியாமல் புழுப்போலத் துடித்துக்கொண்டிருக்கின்றனர் நம் நாட்டு ஆரம்ப ஆசிரியர்கள். இது உலகமறிந்த உண்மை.

"ஆசிரியர் உலகத்திற்கு நாம் இழைத்துவிட்ட மிகப் பெரிய அநீதி இது. இதனை நாம் அழித்தே தீரவேண்டும்"—இப்படிப் பேசுகின்றனர் நாட்டின் நல்லறிவாளர்கள்.

"ஆரம்ப ஆசிரியர்கட்கு அதிக ஊதியம் அளிக்கத்தான்வேண்டும். நியாயம்தான். ஆனால் பணம்தான் இல்லை எங்களிடம். பணம் கிடைத்ததும் இந் நற்பணியை ஆற்றத்தான்போகிறோம்."—இவ்வாறு கூறுகின்றனர் நம் நாட்டு ஆட்சியாளர்கள்.

"ஊதியம் குறைவுதான். ஆனால் அவர்கள் ஆற்றிடும் பணி சிறந்தது. அவர்கள்தான் நாட்டின் வருங்கால வீரர்களை உருவாக்கும் இக்காலச் சிற்பிகள். அவர்களுடைய ஊதியம் இன்றில்லாவிட்டாலும் நாளை உயரத்தான் போகிறது".—இவ்வண்ணம் இயம்புகின்றனர் பல்கலைக் கழகத் தலைவர்கள்.

ஊதியம் குறைவாக இருந்தாலும், இப்படியெல்லாம் பலரும்,

அது விரைவில் உயரும்—உயரத்தான் வேண்டும் என்று பேசி வந்த வார்த்தைகளைக் கேட்டு ஓரளவு ஆறுதல் பெற்றுவந்தனர் ஆசிரியத் தோழர்கள். இப்போதோ, அந்த ஆறுதலுக்கும் வழியில்லாமல் செய்கிறார் விந்தியப் பிரதேச கவர்னர் ஸ்ரீமான் கே. சந்தானம்.

"ஆசிரியராக இருப்பவர், இந்தியாவில், எப்போதுமே,உயர்ந்த அந்தஸ்தும் தாழ்ந்த சம்பளமும் கொண்ட ஒரு மனிதராகத்தான் இருந்துவந்திருக்கிறார். நம் நாட்டிலுள்ள எல்லோருமே கல்வியறிவு பெற்றவர்களாக மாற வேண்டுமானால், இன்னமும் நீண்டகாலத்திற்கு, ஆசிரியர்கள் இப்படிப்பட்ட நிலையினராகத் தான் இருந்துதீரவேண்டும்."

இது, ஸ்ரீமான் சந்தானத்தின் திருவாய்மொழி.

மிக நீண்டகாலத்திற்கு இந்த நிலைதான் இருந்து தீரவேண்டும். துணிந்து கூறுகிறார் விந்தியப் பிரதேச கவர்னர்.

அவர் நினைத்துப் பார்த்தாரோ இல்லையோ நமக்குத் தெரியாது. இந்த வார்த்தைகளைக் கேட்டால் எந்த ஆரம்ப ஆசிரியரின் உள்ளமும் இரத்தக் கண்ணீர் வடிக்காமல் இருக்காது.

வறுமையால் துடித்து, வேதனையால் வதங்கி, கண்ணீர்க் கடலிலே மிதக்கும் வாழ்க்கைப் படகிலே அமர்ந்திருக்கிறார் ஆரம்ப ஆசிரியர். அவரைப் பார்த்துத்தான் ஸ்ரீமான் சந்தானம், உன் நிலை நீண்டகாலத்திற்கு இப்படித்தான் இருக்கும் என்று கூறுகிறார். எத்துணை வேதனை! எவ்வளவு விபரீதம்!!

நெஞ்சிலே நெருப்பை அள்ளிக் கொட்டுவது போல அல்லவா இருக்கிறது வாசகம்—என்று ஆசிரியர்கள் எண்ணினால், அதனை, தவறு என்று எப்படி நாம் சொல்லிவிட முடியும்?

வேண்டாம்! விந்தியப் பிரதேச கவர்னரே, தயவுசெய்து வேண்டாம்! அதிக ஊதியம் தராவிட்டாலும் போகட்டும்! இப்படிப்பட்ட சொற்களை வீசி எங்கள் உள்ளத்தை வாட்டிடும் செயல் மட்டும் வேண்டாம்!

---

## கருத்துக் கதிர்

நாளுக்கு நாள் புதுப்புது சிருஷ்டிகளால் தன்னுடைய வளர்ச்சியைக் காட்டுவதே மனிதனின் இயற்கை. பழைய வழக்கங்கள் என்கிற சிறைச்சாலையிலேயே அவன் எந்நாளும் உழன்று கொண்டிருக்க முடியாது.

—கவி தாகூர்

# இல்லாத ஊருக்குப் போகாத வழி!

ஆதாரக் கல்வி ஆதாரக் கல்வி என்று, அதிகார பீடத்தில் உள்ளவர்களும், அவர்கள் தம் அன்பர்களும் நண்பர்களும் ஓயாமல் பேசி உள்ளம் களிக்கிறார்கள் அல்லவா? அந்த ஆதாரக் கல்வித் திட்டம் எப்படி உருவாயிற்று? அதனால் நாட்டிற்கு என்ன நன்மை? அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்வதால் எதிர்காலத்தில் நமது சமுதாயம் முற்போக்குப் பாதையில் முன்னேற இயலுமா? ஆரம்ப ஆசிரியர்களாகிய நாம், இந்தத் திட்டத்தைப் பற்றிக் கொள்ள வேண்டிய கருத்து யாது? இந்தப் பிரச்சினைகளையெல்லாம், "ஆதாரக் கல்வியின் அர்த்தமென்ன?" என்கிற தலைப்பின் கீழ் "ஜனசக்தி" இதழில் திருவாளர் **ஆர். கார்த்திகைவேலு** அவர்களால் எழுதப்பட்டுள்ள இந்தக் கட்டுரை தெளிவாக அலசியிருக்கிறது. படித்துப் பாருங்கள்:—

* * *

"ஆதாரக் கல்வி முறைதான் எங்களது இறுதி லட்சியம் என்பதைத் தெட்டத் தெளிவாக இன்று இச்சபையில் நான் கூற விரும்புகிறேன். அதில் எத்தகைய சந்தேகமும் இருக்க வேண்டாம்" என்று நமது இராஜ்யக் கல்வி அமைச்சர் திரு. ஸி. சுப்ரமணியம், சென்னை சட்டசபையில் ராஜாஜி கல்வித் திட்டத்தை வாபஸ் வாங்கும் பொழுது கூறினார். இன்னும் 10 ஆண்டுகளுக்குள் நாடெங்கும் இந்த ஆதாரக் கல்வி முறை அமுலுக்கு வரவேண்டுமென்று ஆவடிக் காங்கிரஸிலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்திய சர்க்காரும், சகல ராஜ்ய அரசாங்கங்களும், ஆதாரக் கல்வி முறையை அமுலாக்குவதே தங்கள் குறிக்கோளென அறிவித்துள்ளனர். எனவே இந்த ஆதாரக் கல்வி முறை யென்பது என்ன? இதனால் நாட்டுக்கு நலனுண்டா? என்பதை நாட்டு மக்கள் அறியவேண்டுவதவசியம்.

## ஆதாரக் கல்வி முறையின் வரலாறு

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்த நாட்டை ஆண்ட காலத்தில், தனது தேவைக்குகந்த ஒரு கல்வி முறையை உருவாக்கி, அமுல் நடத்தியது. இந்த முறையானது, தன் ஆட்சியைச் செவ்வனே நடத்துவதற்கு வேண்டிய குமாஸ்தாக்களை உற்பத்தி செய்வதையே அடிப்படை இலட்சியமாகக் கொண்டிருந்தது. இந்தக் கல்வி முறையானது நாட்டு நலனுக்கே விரோதமானதாகவும், பகுத்தறிவுக்கொவ்வாததாகவும், பயனற்றதாகவுமிருந்தது. எனவே அன்னிய ஆட்சியை எதிர்த்து, சுதந்திரப் போரிலிறங்

கிய மக்கள், இக் கல்வி முறையானது பூரணமாக, அடிப்படையிலேயே மாற்றப்பட வேண்டுமென்று கோரினர். தேசிய இயக்கத்தின் தலைமையான காங்கிரஸ் கட்சியும் இம் முறையை வன்மையாகக் கண்டித்தது.

1937-ம் ஆண்டு, தேசிய இயக்கத்திற்குத் தலைமை தாங்கிய காங்கிரஸ், பல மாகாணங்களில் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தவுடன், மக்கள், கல்வி முறையில் மாற்றம் ஏற்படவேண்டுமென விரும்பினர். இந்த ஏகாதிபத்தியக் கல்வி முறையை வன்மையாகக் கண்டித்து வந்த காந்திஜீ, எப்படிப்பட்ட கல்வி முறை வேண்டுமென்பதைப்பற்றி இந்தச்சந்தர்ப்பத்தில் தன்னுடைய கருத்துக்களை 'ஹரிஜன்' பத்திரிகையிலே வெளியிட ஆரம்பித்தார். அவையாவன :

## காந்திஜி கருத்து

1. ஆரம்பக் கல்வியானது 7 ஆண்டுகளுக்குப் போதிக்கப்பட வேண்டும். இந்த 7 ஆண்டுகள் பள்ளி இறுதித் தேர்வு (மெட்ரிகுலேஷன்) க்குள்ள ஆங்கிலம் தவிர இதர பாடங்கள் அனைத்தும் போதிக்கப்படுவதோடு ஒரு கைத்தொழிலும் போதிக்கப்பட வேண்டும்.

2. போதிக்கப்படும் அந்தக் கைத்தொழிலின் மூலமாகவே, அதனோடு இணைத்தே, சகல பாடங்களும் போதிக்கப்பட வேண்டும்.

3. கைத்தொழில் பயிலும் மாணவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டே, பள்ளியாசிரியர்கள் சம்பளம் கொடுக்கப்படவேண்டும். இதை சுய தேவைப் பூர்த்தித் திட்டம் என்று காந்திஜி குறிப்பிட்டார்.

காந்திஜியின் இந்தக் கருத்துக்கள் ஓரளவு நாட்டிலே விவாதிக்கப்பட்டன. பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அமுல் நடத்திய கல்வி முறையானது, வெறும் வாட்டுப் புத்தகப் படிப்பை, அதுவும் நாட்டு நலனுக்குப் பயன்தராத விஷயங்களைக் கொண்ட புத்தகப் படிப்பை அடிப்படையாகக் கொண்டிருந்ததை அனைவரும் கண்டித்தனர். ஆனால் அதற்கு மாற்றுத் திட்டமாக காந்திஜி அளித்த திட்டத்தை எல்லோரும் ஏற்கவில்லை. குறிப்பாக ஒரு சில கைத்தொழில்கள் மூலம் சகல பாடங்களும் போதிக்கப்படவேண்டும் என்பதையும், மாணவர்களின் உழைப்பால் வரும் வருமானத்தின்மூலம் பள்ளிகள் நடத்தப்படவேண்டுமென்பதும் பலராலும் எதிர்க்கப்பட்டது. ஆயினும் காந்திஜி தன் கருத்துக்களைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தார். அத்துடன் இக்கருத்துக்களையடிப்படையாகக் கொண்ட ஒரு கல்வி முறைக்கான திட்டம் தயாரிக்க காந்திஜியின் தலைமையில், வார்தாவில் 1937ம் ஆண்டு, அக்டோபர் 22, 23-ம் தேதிகளில் ஒரு மாநாடு நடந்தது. இம்மா

நாட்டில் டாக்டர் ஜாஹீர் ஹுஸைன், பேராசிரியர் கே. டி. ஷா போன்ற ஒரு சிலரைத் தவிர, பெரும்பாலும் காந்திய வாதிகளும், காங்கிரஸ் மந்திரிகளுமே வந்திருந்தனர்.

இன்றிருக்கும் கல்வி முறையானது, பயனற்ற தென்பதோடு இக்கல்வி பயிலும் பையன்கள் தங்கள் பெற்றோர்களுக்கும், எந்தத் தொழிலுக்காகப் பிறந்தார்களோ, அந்தத் தொழிலுக்கும் தூர விலகி விடுகிறார்கள். எனவே ஆரம்பக் கல்வியானது ஏதாவது ஒரு தொழிலின் மூலமாகவோ அல்லது ஒரு உடல் உழைப்புப் பயிற்சியின் மூலமாகவோ போதிக்க வேண்டும் என்று காந்திஜி கூறினார். அத்துடன் இக்கல்வி முறையானது சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமென்றும் கூறினார்.

## அடிமைத்தனம்

விவாதத்திலே கலந்து கொண்ட டாக்டர் ஜாஹீர் ஹுஸைன் பொதுவாக செயலின் மூலமாகக் கல்வி போதிப்பதை வரவேற்றபோதிலும், சுயதேவைப் பூர்த்தி அம்சம் என்பதை அவர் ஏற்கவில்லை. அதைப் பற்றி அவர் கூறியதாவது:-"நாம் ஏழை நாடாக விருப்பதால், பள்ளிகள் சுயதேவைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமென்று கூறுகிறார்கள். சரி. ஆனால் இது சம்பந்தமாக ஒரு எச்சரிக்கை விடுக்க விரும்புகிறேன். இன்றைய கல்வி முறையின் தீமையான அம்சம் தேர்வுகள்.

இன்று சகல ஆசிரியர்களின் கவனமும் தேர்வுகள்மேல் தான். ஆனால், சுயதேவைப் பூர்த்தி செய்யும் அம்சம்பற்றி அதிகமாக வற்புறுத்துவதில் பெரிய ஆபத்து இருக்கிறது. அடிமை ஓட்டிகளாக ஆசிரியர்கள் மாறி, ஏழைப் பையன்கள் உழைப்பைச் சுரண்ட வேண்டும். இது நடக்குமாயின் புத்தகங்களைவிட தக்ளி மோசமாகி விடும். இதன்மூலம் மறைவான தோர் அடிமைத்தனத்திற்குத்தான் நாம் வித்திடுவோம்."

## இயந்திரகாலமிது

இதே போன்று பேராசிரியர் கே. டி. ஷாவும் இந்தச் சுயதேவைப்பூர்த்தி அம்சத்தை எதிர்த்தார். உடலுழைப்புக்கு முக்கியத்துவமளிக்கும் கல்வி அளித்தபோதிலும் இயந்திரங்களின் முக்கியத்துவத்தை இதனால் குறைத்து மதிப்பிடக்கூடாது என்று கூறும்பொழுது, அவர் தெரிவித்ததாவது: "உடலுழைப்பைப்பற்றி வற்புறுத்துவது நல்லது. ஆனால் நாம் இயந்திர காலத்தில் வசிக்கிறோம் என்பதை மறந்துவிடக்கூடாது. கைத்தொழிலை அதிகமாக வற்புறுத்தி, இயந்திரங்களைத் தூர ஒதுக்குவீர்களானால், நாட்டின் பொருளாதார நலன்கள் பெரிதும் பாதிக்கப்படும்." (பக். 56, தேசிய புனருத்தாரணம்.)

மேலும், இந்த இளம் சிறார்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் விற்பனைக்கு அரசாங்கம் மூலமாக வருமாயின், அதனால் இக் கைத்தொழில்களையே நம்பி வாழும் மக்களுடன் போட்டியேற்படும். ஆதலால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்றும் கே. டி. ஷா கூறினார்.

## " இயந்திரங்களே வேண்டாம் "

இதர பேச்சாளர்கள், (காந்திய வாதிகளும், காங்கிரஸ் மந்திரிகளும்) காந்திஜியின் கருத்துக்களை ஆதரித்தே பேசினார்கள். எனவே காந்திஜி கே. டி. ஷா எழுப்பிய பிரச்னைகளுக்குப் பதிலிறுக்கும்போது, கைத்தொழிலை நம்பி வாழ்வோர் உற்பத்தி செய்த பொருட்களுக்கும், மாணவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கும் போட்டியிராது என்று கூறிவிட்டு இயந்திரங்கள் பற்றி தன் கருத்தைத் தெரிவித்தார். "இயந்திரங்களை எடுத்துக்கொள்ளுங்கள். இயந்திரங்களையே விட்டுவிட வேண்டுமென நான் விரும்புகிறேன். கதரையே நாம் உபயோகிக்கவேண்டும்; அப்படியானால், துணி உற்பத்தி செய்யும் பஞ்சாலைகள் நமக்குத் தேவையில்லை. நமக்கு வேண்டிய துணிகளெல்லாம் கிராமத்திலேயே உற்பத்தி செய்ய வேண்டும். இயந்திரங்களின் அடிமைகளாக நாம் ஆக வேண்டுவதில்லை. இயந்திரங்களுடன் பழகி நாமே இயந்திரங்களாகி விட்டோம். நாம் இயந்திரங்களைக் கைவிட முடியாது என்று நீங்கள் நினைப்பீர்களாயின், உங்கள் முன் நான் சமர்ப்பித்திருக்கும் திட்டம் வீண்தான்." (பக்கம் 60 தேசிய புனருத்தாரணம்.) கே. டி. ஷா கடுமையாக விமர்சித்த போதிலும் இறுதியில் காந்திஜியின் தத்துவமே அங்கீகரிக்கப்பட்டது.

முடிவில் இம்மாநாடு கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியது.

(1) ஏழாண்டுகளுக்குத் தேச முழுவதும் கட்டாய, இலவசக் கல்வி அளிக்க வேண்டுமென்று இந்த மாநாடு கருதுகிறது.

(2) தாய்மொழியே போதனா மொழியாக இருக்கவேண்டும்.

(3) ஏதாவதொரு உடலுழைப்பு வேலையை மையமாகக் கொண்டு இந்தகால கட்டம் முழுவதும் கல்வி போதிக்கப்பட வேண்டும்; இதர சகல திறமைகளையும் குழந்தையின் சூழ்நிலையோடு இணைத்து வளர்க்கவேண்டும். அல்லது பயிற்சி அளிக்க வேண்டும் என்ற காந்திஜியின் கருத்தை இம்மாநாடு அங்கீகரிக்கிறது.

4. இந்தக் கல்வி முறையானது படிப்படியாக ஆசிரியர்களின் சம்பளத்தையும் அளிக்குமென இம் மாநாடு எதிர்பார்க்கிறது.

பேராசிரியர் ஷாவைத் தவிர இதரர்கள் இத்தீர்மானத்தை அங்கீகரித்தனர். சுயதேவைப் பூர்த்தி அம்சத்தை ஷா ஏற்க

வில்லை. இந்தத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு வார்தா கல்வி அல்லது ஆதாரக் கல்வி என்ற முறையானது உருவாக்கப்பட்டது.

இந்த ஆதாரக் கல்வி முறைக்கு அடிப்படையாகவுள்ள வார்தா மாநாட்டுத் தீர்மானத்தின் முதல் இரண்டு அம்சங்களான 7 ஆண்டுகள் கட்டாய, இலவச ஆரம்பக் கல்வி, தாய் மொழியே போதனு மொழியாக வேண்டும் என்பதைப்பற்றி மாறுபட்ட கருத்துக்கள் யாருக்கும் இருக்கமுடியாது.

## விஞ்ஞானரீதியான கல்விக்கு ஏற்றதா ?

மூன்று, நான்காவது அம்சங்களான கைத்தொழில் மூலமாக சகலமும் போதிக்கப்பட வேண்டும் என்பதைப் பரிசீலிக்கலாம்.

காந்திஜியின் கருத்துப்படி, சகல பாடங்களும், சரித்திரம், பூகோளம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய அனைத்துமே ஏதாவது ஒரு கைத்தொழிலின் மூலமாக, அதனோடு இணைத்துப் போதிக்க வேண்டும். இன்று நாம் அணு சக்தி காலத்தில் வாழ்கிறோம். மனிதன் இயற்கையை மேலும் மேலும் வென்று தனக்கடிமையாக்கி வருகிறான்.

இவ்வித விஞ்ஞான, இயந்திர வளர்ச்சியின் காரணமாக மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொண்டே போக முடியும் என்பதும் நிரூபிக்கப் பட்டுள்ளது, இக்காலத்தில். அத்துடன் இத்தகைய மாறுதல்களிலிருந்து எந்நாடும் விலகி நிற்கவும் முடியாது. இந்நிலையில் நமது குழந்தைகளும் இன்றைய நவீன உலகின் நலங்கள் அத்தனையையும்புரிந்துகொண்டு,நாட்டின் வளத்தைப் பெருக்குவதில், வயது வந்த பின் அவர்கள் பங்கு கொள்ளவேண்டுமாயின் விஞ்ஞான ரீதியான கல்வி தேவை.

## சிந்தனு சக்தி வளராது

அத்தகைய கல்வியை ஏதாவதொரு கைத்தொழிலை வைத்துக் கொண்டு போதிக்க முடியாது. அது குழந்தைகளின் அறிவு வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும்.

ஏகாதிபத்திய கல்வித் திட்டமானது வரட்டுத் தனமான புத்தகப் படிப்பை அடிப்படையாகக் கொண்டது என்பதற்காக, கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்டு அனைத்தையும் போதிக்க வேண்டு மென்பது பகுத்தறிவுக் கொவ்வாததாகும். வெறும் புத்தகப் படிப்பில்லாமல், பல்வேறு விதமான நடவடிக்கைகளின் மூலமாக, குழந்தைகளின் சிந்தனையைத் தூண்டும் முறையில் போதனை யிருக்க வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்திருக்க முடியாது. ஆனல் ஆதாரக் கல்வித் திட்டத்தின்படி குழந்தைகளின் சிந்தனு சக்தி வளருவதற்குப் பதில், தடைப் படும்.

இவ்விதம் கற்றுக்கொண்ட கைத்தொழில்கள் மூலம் பள்ளியை விட்டபின் வாழ்க்கை

நடத்தலா மென்பது உண்மை யிலே விந்தைதான், பரம்பரை யாக இக்கைத்தொழில்களை நம்பி வாழ்ந்தவர் பட்டினி வாழ்வு வாழும் இக்காலத்தில்!

ஒரு நாட்டின் கல்வித் திட்டமானது அந்த நாட்டின் தேவைகளுக்குகந்ததாக, அந்த நாட்டின் குழந்தைகளை, நாட்டின் வளத்தைப் பெருக்கும் நற்பணியிலே பயன்படும் பிரஜைகளாக மாற்றக் கூடியதாக இருக்கவேண்டும். இன்று நம் நாடு பொருளாதார ரீதியில் பின்தங்கிய நாடாக இருக்கின்றது. இந்நிலையை மாற்ற அடிப்படை மாற்றங்கள் தேவை. நாட்டின் நில உறவுகளில் அடிப்படை மாறுதல்கள் ஏற்படுத்தி, விவசாயியின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும். அதே சமயத்தில் நாட்டின் யந்திரத்தொழில்வளத்தைத் துரிதமாகப் பெருக்க வேண்டும். இதன் மூலம்தான் நாட்டின் பொருளாதாரம் உயர முடியும். இந்த உண்மையை இன்று பண்டித நேருவும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஆவடிக் காங்கிரஸுக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் அவர் கூறுவதாவது: "இந்தியாவைத் தொழில் மயமாக்குவதில் நாம்நம் முடையவழியைக் கடைப்பிடித்த போதிலும், இயந்திரத் தொழில் வளர்ச்சியில் துரிதமாக முன்னேறுவதைத் தவிரவேறு வழி கிடையாது. இன்றேல் பின் தங்கிய, வளர்ச்சியடையாத, வறுமையால் ஊறிய, பலவீனமான நாடாகத்தானிருக்கும் நம்நாடு. இயந்திரத்தொழில் வளர்ச்சியில்லாமல், நம்முடைய சுதந்திரத்தைக் கூடக் காக்கமுடியாது. நாட்டின் ஜனத்தொகை இன்றிருப்பதைவிடக் குறைவாக விருந்த காலத்தில், தொழில் நுணுக்கம் வளர்ச்சியடையாத காலத்தில், ஒரு விவசாயப் பொருளாதாரம் போதுமானதாக விருந்திருக்கலாம். ஆனால், பட்டினி வாழ்வையும் விட கேவலமான வாழ்வை நடத்த வேண்டு மென்பதுதான் அப் பொருளாதாரத்தி விருப்பதன் அர்த்தம்."

பண்டித நேருவின் இந்த வார்த்தைகள் நூற்றுக்கு நூறு சரியானவை. ஆனால் இயந்திர வளர்ச்சி துரிதமாக ஏற்பட வேண்டுமானால் ஆயிரக் கணக்கான தொழில் நுணுக்க நிபுணர்கள் தேவை. அடிப்படையில் ஆதாரக்கல்வியை இலட்சியமாகக் கொண்டு அத்தகைய தொழில் நுணுக்க நிபுணர்களைத் தயாரிக்க முடியுமா? ஆதாரக் கல்வியின் கர்த்தா காந்திஜி வார்தா மாநாட்டில் பேசும் பொழுது கூறியதாவது: "நீங்கள் இயந்திரங்கள் உண்மையிலேயே தவிர்க்க முடியாதவை என்று நினைப்பீர்களேயானால், என்னுடைய இந்தத் திட்டத்தை (ஆதாரக்கல்வி) நீங்கள் நிராகரிக்க வேண்டும். மாற்றுத் திட்டம் தயாரிக்க வேண்டும்." (பக்கம் 60, தேசிய புனருத்தாரணம்.) காந்திஜியின் இந்த வார்த்தைகள், ஆதாரக் கல்வி, இயந்திர வளர்ச்சிக்கு எதிரான ஒரு தத்துவத்தை

அடிப்படையாகக் கொண்டது என்பதைத் தெளிவாக்குகிறது. அத்தகைய தத்துவத்தை அடிப் படையாகக் கொண்ட ஆதாரக் கல்வி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவ முடியாது.

## அடிப்படை முரண்பாடு

ஆனல் இயந்திரத் தொழில் வளர்ச்சி துரிதமாக்கப்படவேண் டும் என்று ஆவடியில் கூறிய பண்டித நேரு, அதே ஆவடியில் ஆதாரக் கல்வித் திட்டம் பத்து ஆண்டுகளுக்குள் அமுலுக்கு வர வேண்டுமென்ற தீர்மானத்தைப் பிரேரேபித்துப்பேசியிருக்கிறார். நேருஜி இயந்திர வளர்ச்சிவேண் டுமென்கிறாரா? இல்லை. இயந்திர வளர்ச்சிக்கெதிரான ஆதாரக் கல்வி வேண்டுமென்கிறாரா? விவ சாயப் பொருளாதாரத்தைப் பாதுகாப்பது என்பது இன்றி ருக்கும் நிலையில் பட்டினி வாழ்வு வாழவேண்டியது என்றுதான் அர்த்தம் என்று கூறும் நேருஜி, விவசாயப் பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற் கென்றேதான், நான் இந்தத்திட்டத்தைத் தயா ரித்தேன் என்று கூறி காந்திஜி தயாரித்த ஆதாரக் கல்வியை ஆதரிப்பதன் மர்மம் என்ன? எனவே, நேருஜி இயந்திர வளர்ச்சிக்காகத் திட்டமிட வேண்டுமென்பது உண்மையா? அல்லது ஆதாரக்கல்வி வேண்டு மென்பது உண்மையா? இது காங்கிரசுக் கொள்கையின் அடிப் படை முரண்பாட்டைத் தெளி வாக்குகிறது.

## நடைமுறையில் தோல்வி

இந்த ஆதாரக் கல்வி நடை முறையில் எந்த அளவுக்கு வெற்றியடைந் திருக்கிறது? 1946–ம் ஆண்டில் காங்கிரசு பத வியேற்ற நாளிலிருந்து முயற் சித்து சென்னை ராஜ்யத்தில் மிகச் சில பள்ளிகளில்தான் ஆதாரக் கல்வி புகுத்தப் பட்டுள்ளது. காரணம் இந்த ஆதாரப்பள்ளிகள் ஆரம்பிப்பது செலவையே அதிகமாக்குகிறது. காந்திஜியின் சுயதேவைப் பூர்த் தித் திட்டம் நடைமுறைக்கு வர வில்லை. "சுய தேவைப் பூர்த்தி செய்வது என்பதுதான் என் திட்டத்தின் வெற்றிக்கு உரை கல்" என்ருர் காந்திஜி. ஜாஹீர் ஹுசேனும், கே. டி. ஷாவும் கூறியதே போன்று இந்த சுய தேவைப் பூர்த்தி அம்சம் ஜன நாயக விரோதமான, குழந்தை அடிமைத்தனத்தை, குழந்தை யின் உழைப்பைச்சுரண்டுவதைத் தான் உண்டாக்கும். ஆனல் நடைமுறையில் இந்தத் திட்டமா னது தோல்வியை யடைந்துள் ளது. அதனல்தான் நம் மாகாண கல்வி அமைச்சர் கூறுவதுபோல ஆதாரக் கல்வியின் முன்னேற் றம், "வருந்தத்தக்க முறையில் மெதுவாக" இருக்கிறது.

இவ்விதம் நடைமுறையும் தத் துவமும், இந்த ஆதாரக் கல்வித் திட்டம் பிற்போக்கானது, நாட்டு நலனுக்குகந்ததல்ல; இயந்திரத் தொழில் வளர்ச்சியின் எதிர்ப் பை, மத்தியகால பொருளாதார அமைப்பைப் பாதுகாப்பதை

அடிப்படையாகக் கொண்டது என்று நிரூபித்தபோதிலும் ஆட்சியாளர்கள் வரட்டுத்தனமாகத் தங்கள் கொள்கையை விடமறுக்கின்றனர்.

**உஷார்! உஷார்! உஷார்!**

ராஜாஜி கல்வித் திட்டத்தை வாபஸ்வாங்கியகாலத்தில், தங்களின் இறுதி லட்சியம் ஆதாரக் கல்விமுறைதானென்றும், ஆனால் அதை முழுதும் புகுத்துவது கஷ்டமாக விருப்பதால், இடைக் காலத்திற்கான திட்டம் தயாரிக்க ஒரு விசாரணைக் குழு அமைப் போமென்று, அமைச்சர் சுப்ர மணியம் கூறினர். அதன்படி டாக்டர் அளகப்ப செட்டியார் தலைமையில் ஒருகமிட்டி அமைக் கப்பட்டுள்ளது. இக்கமிட்டி அமைத்ததின் நோக்கம், ஆதாரக் கல்வித் திட்டத்தின் மறு பதிப்பான ராஜாஜி திட்டத்தை மறைமுகமாகக் கொண்டுவருவதற்காக என்ற ஐயம் எழும்பியுள்ளது. அவர்கள் கொடுத்திருக்கும் வினாத்தாளும் இந்த ஐயத்தை உறுதிசெய்கிறது. எனவே மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். நமக்கு வேண்டியது நாட்டின் பொருளாதார, கலாசார வளர்ச்சிக்குகந்தமுறையிலே உருவாக்கப்படும் ஒரு தேசிய, விஞ்ஞான கல்விமுறையாகும். ஆதாரக் கல்வியோ, ராஜாஜி திட்டமோ, அல்லது இவற்றின்வேறு புதிய பதிப்போ நாட்டு நலனுக் குகந்த தல்ல.

—“ஜன சக்தி”


**“ஆரம்பக் கல்வி ஆபீஸ்”**

★

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

★

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-8

ரிகார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-0

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-0

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-0

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-0

(தபால் செலவு உட்பட)

★

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# கருத்தைக் கவரும் கல்விச் சோலை

★

எழிலும் பண்பும் மிகுந்த தாய், தமிழ் மக்கள் தம் உள்ளத்தில் தனியிடம் பெற்றதாய், செந்தமிழ் மொழியின் சிறந்ததோர் நிலையமாய், தென்னாட்டின் பெருமையை நிலைநாட்டும் தகுதி படைத்ததாய், சென்ற 25 ஆண்டுகளாக ஒளி வீசித் திகழ்வது அண்ணாமலைப் பல்கலைக் கழகம். அதன் வெள்ளி விழா, சீரும் சிறப்பும் ததும்பும் வகையில், 8–2–55 அன்று சிதம்பரம் நகரில் நடைபெற்றிருக்கிறது.

அந்த வெள்ளி விழாச் சேதி கேட்டுத் தமிழ்கம் துள்ளிக் குதித்து மகிழ்ச்சிச் சிந்து பாடியபடி இருக்கிறது. தமிழர் தம் கருத்தைக் கவர்ந்த கல்விச்சோலை அல்லவா அது? அதற்கு வெள்ளி விழா என்றால் கள்ளமற்ற தமிழர் உள்ளத்தில் வெள்ளமென மகிழ்ச்சியும் உணர்ச்சியும் பாயாமலா இருக்கும்? இத்தகு பீடும் பெருமையும் படைத்த பல்கலைக் கழகம் எப்படிப் பிறந்தது, எவ்வாறுவளர்ந்தது,எங்ஙனம்சிறப்படைந்தது? தெரிய வேண்டாமா ஆரம்ப ஆசிரியர்கட்கு? இதோ, அந்தக் கேள்விகளுக்கான விளக்கம் :—

டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்களின் தமையனாராகிய திவான்பகதூர் ராமசாமி செட்டியாரவர்கள் தம் பெயரால் ஓர் உயர்நிலைப் பள்ளியைச் சிதம்பரத்தில் நிறுவினார்கள். தமையனார் அவர்கள் 1915ல் இறையடி சேர்ந்தமையின் அவர்கள் வகுத்த அறங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு ராஜா சர் அ ண் ணா ம லை செட்டியாரைச் சேர்ந்தது. தமையனார் பெயரால் நடைபெற்றுவரும் உயர்நிலைப் பள்ளியை முதற்றரக் கல்லூரியாக்க ராஜா அவர்கள் எண்ணினார்கள். தம் எண்ணப்படியே 1920–ம் ஆ ண் டி ல் சென்னை மாகாணக் கல்வித்துறைத் தலைவர் வி ட் டி ல் ஹெயில்ஸ் அவர்களால் அப்பள்ளியின்கண் கல்லூரி முதல் வகுப்புத் தொடங்கப்பெற்றது. அக்கல்லூரிக்குத் தம் அருமை அன்னையாரின் நினைவாக மீனாட்சிக் கல்லூரி எனப் பெயரிட்டார்கள். திரு. நீலகண்ட சாஸ்திரியார் அதன் தலைவராக விளங்கினார். சிறந்த ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் அக் கல்லூரி செவ்வனே நடைபெற்று வருவதாயிற்று. ஊர் நடுவண் அமைந்திருத்தலால், கல்லூரிக்கு இடம் போதாதென்றெண்ணிய அண்ணாமலை வள்ளல், சிதம்பரம் நகரின் கீழ்பால் எல்லையில், ஒன்றரைக் கல் தொலைவில் உள்ள திருவேட்களத்தில் 100 ஏக்கர் நிலம் வாங்கினார்கள். உரிய கட்டடங்கள் விரைவில் கட்டிமுடிக்கப்

பெற்றன. கட்டட வேலைகள் முற்றுப்பெறு முன்பே பி. ஏ. வகுப்புத் தொடங்கப் பெற்றது. 1920-ல் கல்லூரி முதல் வகுப்பில் பயின்ற மாணவர்கள், 1922-ல் மேல் வகுப்பில் சேர்தற்குரிய வசதிகள் செய்யப் பெற்றன. 29–6–1922-ல் ஆந்திரப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் திரு சி. ஆர். ரெட்டி பி. ஏ. வகுப்பைத் தொடங்கி வைத்து, ராஜா சர் அண்ணாமலை செட்டியாருடைய கலைப்பணியினைப் பாராட்டினார். அதனுடைய சிறந்த எதிர்கால வளர்ச்சியைப் பற்றியும் முன்னரே உணர்ந்துரைத்தார். மீனாட்சிக் கல்லூரி ஒரு பல்கலைக் கழகமாக அமையவேண்டும் என்றெண்ணியிருந்த ராஜா சர் அண்ணாமலை செட்டியாரை திரு. ரெட்டியின் பேச்சு ஊக்குவித்தது.

1924-ல் ஆசிரியர் சிலரும், மாணவர் சிலரும் தங்கியிருத்தற்கு வீடுகளும், விடுதிகளும் அமைக்கப்பெற்றன. 1925-ல் ஆங்கிலம், வரலாறு, பொருளாதாரம் ஆகியவற்றில் கலைச்சிறப்பு (பி.ஏ. ஆனர்ஸ்) வகுப்புகளும் தொடங்கப்பெற்றன. விஞ்ஞானப் பகுதிக்கும், ஆராய்ச்சிக் கூடத்திற்கும் தனிக் கட்டடம் கட்டப்பெற்றது. அப்போது சென்னைக் கவர்னராயிருந்த கோஷன் பிரபு 1926-ல் விஞ்ஞானப் பகுதியைத் திறந்து வைத்து, அண்ணாமலை வள்ளலின் கலையார்வத்தினைப் பாராட்டினார்கள். தமிழர் தம் தனிப் பண்புகளை அறிந்து வளர்ப்பதற்குத் தமிழ் மொழியிலுள்ள சிறந்த இலக்கிய இலக்கணங்களைக் கற்றறிதல் வேண்டுமென்ற நன்னோக்கத்துடன் 1927-ல் மீனாட்சி தமிழ்க் கல்லூரியை, அண்ணாமலை வள்ளல் நிறுவினார்கள். அதற்கு டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் தலைவரானார். அவ்வாண்டிலேயே வடமொழிக் கல்லூரி ஒன்றும் நிறுவப்பெற்றது. தமிழ்ப் பயிற்சிக் கல்லூரியும் தோன்றியது. இசை வளர்ச்சிக்கும் ஆவன செய்ய வேண்டுமென்றெண்ணிய அண்ணாமலை வள்ளல் 1929-ல் இசைக் கல்லூரி ஒன்றையும் நிறுவினார்கள். 1920-ம் ஆண்டு முதல் 1929-ம் ஆண்டுவரை பத்தாண்டுகளுக்குள் நான்கு கல்லூரிகளை ராஜா அமைத்துக் கல்வியை வளர்க்கும் அரும்பணியில் தலைசிறந்துவிளங்கினார்கள்.

தொடக்கத்திலேயே ராஜா சர் அண்ணாமலை செட்டியார் ஒரு பல்கலைக் கழகம் நிறுவ வேண்டுமென எண்ணியிருந்தபடியால், விளையாடுமிடங்கள், கட்டடங்கள் ஆகியவற்றையெல்லாம் மிகப் பெரிய அளவிலேயே அமைத்தார்கள். அண்ணாமலை வள்ளலின் திட்டங்கள், ஆசிரியர்களும், மாணவர்களும் உடனுறையும் ஒரு பல்கலைக் கழகமாகத் திகழ்வதற்குத் தகுந்தவாறு உருவாயின.

1926-ல் அரசாங்கம் தமிழ் மொழிக்கென்று ஒரு பல்கலைக் கழகம் அமைப்பதுபற்றி ஆய்வுக் குழு ஒன்றை அமைத்தது. எத்

துணைப் பல்கலைக் கழகங்களை நிறுவலாமோ அத்தனைப் பல்கலைக் கழகங்களை நிறுவலாமென்றும் ஆனால் பொருள்வசதி யின்மையின் ஒரு பல்கலைக் கழகங்கூட உடனடியாகத் தொடங்குவதற்கில்லையென்றும் அக்குழு அறிவித்தது. அப்போது சென்னை பல்கலைக் கழகக் குழுவினர், மீனாட்சி கல்லூரியைநேரில் வந்து பார்த்து, அதனுடைய நடைமுறைகளைக்கண்டு வியந்தனர். சிதம்பரத்தில் பல்கலைக் கழகம் நிறுவுவதற்குரிய திட்டத்தை அக்குழுவின் ஆலோசனைக்குக் கல்வித்துறைத் தலைவர் அனுப்பி வைத்தார். அக்குழு அவ்வறிக்கையை ஆராய்ந்து அத்திட்டத்தின் முக்கியக்கொள்கைகளுக்கு ஒப்புதலளித்தது. அரசாங்கம் அத்திட்டத்தை ஆதரித்துப் பொருளுதவி செய்யுமெனத் தாம் நம்புவதாக அக்குழு தெரிவித்தது. முன்பு ஏற்படுத்திய கல்லூரிகளையும் நன்கு முடிக்கப்பெற்ற எல்லாக் கட்டிடங்களையும் 20 லட்சம் ரூபாயையும் நன்கொடையாகத் தர தாம் முன்வருவதாகவும், அவற்றின் அடிப்படையில் பல்கலைக் கழகம் ஆக்க வேண்டுமென்றும் அண்ணாமலை வள்ளல் அரசாங்கத்தாருக்குத் தெரிவித்தார்கள். அரசியலார் இவ்வள்ளற் பெருமானுடைய பெருந்தன்மையைப் பாராட்டினர். வைப்புப் பொருளாக 20 லட்சம் ரூபாயும் கட்டிடங்கள் கட்டுவதற்காக ஏழரை லட்சம் ரூபாயும் ஆண்டுதோறும் உதவித் தொகையாக ஒரு லட்சம் ரூபாயும் வழங்க அரசாங்கத்தாரும் இசைந்தனர். அப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்றும் அதன் சார்பாக உண்டாகும் நகரம், அண்ணாமலை நகரமென்றும் எந்நாளும் வழங்கப்பெறுமெனவும் அரசாங்கத்தார் உறுதி கூறினர். இச் செய்தி கேட்டுத் தமிழ் மக்கள் எல்லோரும் வாழ்க அண்ணாமலை வள்ளல் 'வளர்க அண்ணாமலைப் பல்கலைக் கழகம்' என வாயார வாழ்த்தினர். வள்ளல் அப்போது வழங்கிய தொகையும், கட்டிட மதிப்பும் 40 லட்சம் ரூபாய்க்கு மேலாகும்.

சென்னைச் சட்டசபையில், இப் பல்கலைக் கழகம் பற்றிய திட்டம் வந்தபோது, அது விரும்பி வரவேற்கப்பெற்றுச் சட்டமாக்கப் பட்டது. அப்போது முதல் அமைச்சராக இருந்த டாக்டர் சுப்பராயன், திரு. எஸ். சத்தியமூர்த்தி சர் ஏ. பி. பாத்ரோ முதலியோர் பல்கலைக் கழகத் திட்டத்தை ஆதரித்துப் பாராட்டிப் பேசினர். பனகல் அரசர் இந்த நன்கொடையைத் தனிப்பட்டவர் செய்யும் நன்கொடையில் மிகக் குறிக்கத்தக்கதென்று கூறினர். ராஜா சர் அண்ணாமலை செட்டியாரின் பெருந்தன்மையும், உயர்குணமும் இந்தியாவிலேயே மிக மேம்பட்டனவென்றும், இப்படி ஒரு சிறந்த காரியத்திற்காக 40 லட்சம் ரூபாய் நன்கொடையளிப்பதைக் காணுதல் அரிதென்றும் பாராட்டிப் பேசினர். ஸர். ஏ. பி. பாத்ரோ

இந்தியாவில் பல்கலைக் கழகம் நிறுவிய ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் ஒப்பற்ற ஒரு எடுத்துக்காட்டாக விளங்குவதாகத் தெரிவித்தார். திரு.எஸ். சத்திய மூர்த்தி நிறுவியோரின் பெருங் கொடையினைப் புகழ்ந்து கூறி உலகப் பண்பாடுகளை சந்திக்கும் ஓரிடமாக இப்பல்கலைக் கழகம் விளங்குமெனக் குறிப்பிட்டார். பின்னர் சட்டசபை உறுப்பினர் அனைவராலும் ஆதரிக்கப்பெற்று இப் பல்கலைக் கழகச் சட்டம், சென்னை கவர்னராலும், இந்திய அரசப் பிரதிநிதியாலும் ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

1929-ம்ஆண்டு ஜூலை மாதத்தில், பல்கலைக் கழகம் தொடங்குவதென்று முடிவு செய்யப்பெற்றது. வகுப்பறைகளுக்கும், ஆசிரியர் இருத்தற்குரிய இடங்களுக்கும் மிக விரைவில் ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. செனேட், சிண்டிகேட், அகடமிக் கௌவுன்சில், ஆகியவை 1929-ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் 6-ந் தேதியிலிருந்து பணிபுரியத் தொடங்கின. செனேட்டைத் தொடங்கி வைக்கும்படி சென்னை மாகாண கவர்னர் கோஷன் பிரபுவைக் கேட்டுக்கொண்ட ராஜா சர் அண்ணாமலை செட்டியார் ஆற்றிய சொற்பொழிவில் 'சென்னை அரசாங்கம் தனிப்பட்டவர்கள் செய்யும் பொது நன்மைக்கான முயற்சிகளுக்கு ஊக்கம் அளிப்பதும் தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றை உலகறியச் செய்யவேண்டும் என்னும் அவாவும் இப் பல்கலைக் கழகம் தோன்றுவதற்குக் காரணமாகும்' என்று குறிப்பிட்டார்.

ராஜாவின் எண்ணம் போலப் பல்கலைக் கழகம் பல்லாற்றானும் நன்கு வளர்ந்து வருகிறது. மெய்ப்பொருள் வரலாறு, பொருளாதாரம், சமூக கிராம நலம், கணிதம், புள்ளி விவரம், பௌதிகம், ரஸாயனம், தாவரம், விலங்கு நூல், விவசாயம், நில நூல், ஆசிரியப் பயிற்சி, இசைப்பயிற்சி, பொறியியல், இரசாயனத் தொழிற் கல்வி, ஓவியம், நாடகம், மாணவர் படைப் பயிற்சி ஆகியவைகளும் தமிழ், ஆங்கிலம், வடமொழி, பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மொழிகளும் இப்போது கற்பிக்கப் பெறுகின்றன. பல்வேறு துறைகளிலும் ஆராய்ச்சிஊக்குவிக்கப்படுகிறது. விலங்குநூற்பகுதி பல்கலைக்கழகத்தினின்றும், அரசாங்கத்தினின்றும் பொருளுதவி பெற்று, விலங்கு ஆராய்ச்சி நிலையம் ஒன்றைப் பரங்கிப் பேட்டையில் நிறுவியுள்ளது. விலங்குநூற் பகுதியில் உள்ள பொருட்காட்சி எல்லோரும் கண்டு மதித்தற்குரியது. பொறியியற் பகுதியும், இரசாயனத் தொழிற் கல்விப் பகுதியும் திறம்பெற்ற தொழில் வல்லார் பலரை ஆக்கி, நாட்டிற்கு உதவிவருகின்றன. விவசாய ஆராய்ச்சிப் பண்ணை வளமாகஉள்ளது. விவசாயத் துறையில் கத்தரிக்காயை விதையில்லாமல் உற்பத்தி செய்யும் முறையும், ஜப்பான் முறைப்படி பயிர் சாகுபடி

செய்யும் முறையும், குறிப்பிடத் தக்கன. பலர் பாராட்டும் முறையில் செம்மையாக, மாணவர்களுக்குப் படைப் பயிற்சி இங்கே அளிக்கப்பெறுவதும் குறிப்பிடத் தக்கது. கற்றுத்துறைபோய பேராசிரியர்களும், ஆசிரியர்களுமாக நூற்றெழுபத்தைவருக்கு மேற்பட்டவர் எல்லாத் துறைகளிலும் பணியாற்றி வருகின்றனர். இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கல்வி பயில்கின்றனர். ஒருலட்சம் நூல்கள் அடங்கிய நூல் நிலையம் ஒன்று நன்கு பயனளித்து வருகிறது. சிறந்த ஆராய்ச்சி நூல்களும் பிறவுமாக 100 வரை பல்கலைக் கழக வெளியீடுகள் வெளிவந்திருப்பது மிகவும் போற்றுதற்குரிய பணியாகும். இங்கே கல்வி பயின்ற பழைய மாணவர் பலர், பல துறைகளில் தலைசிறந்து விளங்குவது பல்கலைக்கழகத்தின் பெருமகிழ்ச்சிக்கு உரியது.

பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்ட அழகிய மாணவர் இல்லங்கள் பல உள்ளன. இவற்றில் ஆயிரத்து இருநூறு மாணவர் உள்ளனர். இவை மேலும் மேலும் விரிவடைந்து வருகின்றன. மகளிர் விடுதி 80 மாணவியர் தங்குவதற்கேற்றதாக உள்ளது. மாணவர் இல்லங்கள், திருவள்ளுவர் இல்லம், இளங்கோ இல்லம், கம்பர் இல்லம், பாரதி இல்லம், சேக்கிழார் இல்லம், திருவாங்கூர் இல்லம் எனப் பல பிரிவாகச் சிறந்து விளங்குகின்றன.

பல்கலைக் கழகம், கல்விக்கு ஊக்கமளிப்பதுபோலவே உடல் நலத்திற்குக் காரணமான விளையாட்டுக்களுக்கும் ஊக்கமளிக்கிறது. இங்கே பலவகை விளையாட்டுகளும் இடம் பெற்றுள்ளன. இவைகள் எல்லாவற்றிலும்மாணவர்கள் சிறந்துவிளங்குகின்றனர். கிரிக்கெட் வட்டாரங்களில் செட்டிநாட்டுக் கப் சிறந்ததொன்றாகும். விளையாடும் பகுதியைச் சார்ந்த படகு ஓட்டும் கால்வாய் குறிப்பிடத்தக்கது. சிறந்த மருத்துவ நிலையம், இங்கு நற்பணி புரிந்து வருகின்றது.

பல்கலைக் கழகத்திற்கு விருந்தினராக வருபவர்கள் தங்குவதற்குச் சிறந்ததொரு விருந்தினர் மாளிகை உள்ளது. அண்மையில் மற்றொரு விருந்தினர் மாளிகையும் அமைக்கப் பெற்றிருக்கிறது. ஆசிரியர்களுக்கென்று பொழுது போக்குக் கழகம் ஒன்றும், மகளிர் பொழுது போக்குக் கழகம் ஒன்றும் உள்ளன. மகளிர் பொழுது போக்குக் கழகத்திற்குச் செட்டிநாட்டாசி மெய்யம்மை ஆச்சி அவர்கள் பேராதரவு அளித்து வருவது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தொடக்க நாள் முதல் இதன் தமிழ்த்துறையும்வளர்ந்து வருகின்றது. இப்பல்கலைக் கழகம், 25 ஆண்டுகளாகத் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் செய்துவரும் பணிகளை எண்ணிப்பார்த்தால், இது, தமிழ் இலக்கிய வரலாற்றில் தனக்கெ

னச் சிறப்பான தோர் இடம் பெற்றிருப்பது புலனாகும். எனவே, இப்பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்த டாக்டர் ராஜா ஸர். அண்ணாமலைச் செட்டியாரின் விருப்பம் ஒருவாறு நிறைவேறிவிட்டதாகக் கூறலாம். செனட் சபையின் தொடக்க விழாவின்போது ராஜா ஆற்றிய சொற்பொழிவு இன்னும் நம் செவிகளில் ஒலித்தவண்ணமாக இருக்கிறது. தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் உலகறியச் செய்வதே இப்பல் கலைக்கழகத்தின் சிறந்த குறிக்கோளாக இருக்கும் என்று ராஜா அப்போது தெரிவித்தார்கள். அன்னாரின் திருவுள்ளமே இன்று தமிழ்த் துறைக்கு உறுதுணையாக நின்று உதவுகின்றது. தந்தையாரைப் போலவே தமிழ்மொழியை மேலும், மேலும் வளர்த்து அதற்குப் பெருமைதரும் மைந்தரும், தமிழ்நாட்டின் தலைசிறந்த தோன்றலும் ஆகிய ராஜா ஸர். முத்தைய செட்டியாரின் அரும் பெரும் பண்புகளுக்கு நாம் என்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.

தமிழில் தேர்ச்சி அடைந்து பி. ஏ. ஆனர்ஸ் பட்டம் பெறுவதற்குரிய வகுப்பு இப்பல்கலைக் கழகத்திலேயே முதன் முதலாகத் தொடங்கப் பெற்றது. தமிழாசிரியர்கட்கு ஆசிரியப்பயிற்சி முதன் முதல் அளித்த பெருமையும் இப் பல்கலைக் கழகத்தையே சாரும். பிற பல்கலைக் கழகங்களில் தமிழுக்கெனப் பேராசிரியப் பதவி இல்லாமலிருந்தபோது தமிழுக்கெனப் பேராசிரியப் பதவி ஒன்றை முதன் முதலாக ஏற்படுத்தித் தமிழைப் பெருமைப்படுத்தியதும் இப்பல்கலைக் கழகமேயாகும்.

தமிழ்த் துறையின் ஒருபகுதியாக விளங்கிய தமிழ் ஆராய்ச்சித்துறை, டாக்டர் ஸர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார் ஆட்சிக் காலத்தில் தனக்கென ஒரு பேராசிரியரைக்கொண்டு தனித் துறையாகியது. அடுத்து டாக்டர் ஸர். சி. பி. இராமசாமி ஐயர் துணைவேந்தராய் வந்தவுடன், தமிழ்த்துறை மேலும் ஒரு தனித் துறையாகப் பிரிந்து, வேறொரு பேராசிரியரைப் பெற்றது. இப்பிரிவுகளைப் பிரிவு என்று சொல்லுதல் கூடாது. தமிழ்த்துறையின் விரிவு என்றே சொல்லுதல் வேண்டும். எனவே, தமிழுக்கென இப்பொழுது மூன்று பேராசிரியர்களும், அம் மூவரையும் தலைவராகக் கொண்ட மூன்று தனித்துறைகளும் உள்ளன. இன்னும்சொன்னால், தமிழுக்குப் பேராசிரியர் நால்வராகும் நிலை வந்து கொண்டிருக்கிறது. அதாவது, இந்திய அரசியலார் வெள்ளி விழா நினைவாகப் பெருந்தன்மையோடு அளித்த மூன்று லட்ச ரூபாயை மூலதனமாகக்கொண்டு, ஒரு தமிழ்ப் பேராசிரியரை நியமிக்கவும் பல் கலைக்கழகத்தார் கருதியுள்ளனர்.

தமிழ்க்கலைப் பகுதிக்கு டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டி

யார் எம். ஏ., பி. எச். டி., தமிழ்க் கீழ்த் திசைக்கலைப் பகுதிக்குப் பண்டித வித்துவான் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார், தமிழ் ஆராய்ச்சிப் பகுதிக்கு வித்துவான் திரு. கே. சுப்ரமண்ய பிள்ளை எம். ஏ. பி. எல். இவர்கள் பேராசிரியர்களாகவும், தலைவர்களாகவும் இப்போது உள்ளனர். இவர்கள் தலைமையின் கீழ்ப் பத்தொன்பது ஆசிரியர்கள் பணி புரிந்து வருகின்றனர்.

தமிழ்த் துறையின் முதல் தலைவராகவும்ரீடராகவும்திரு.கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ., எம். எல்., பொறுப்பேற்றார்கள். ஓராண்டுக்குப்பின் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை பி. ஏ., பி. எல்., அப்பொறுப்பினை ஏற்றுச் சில காலம் நடத்தினார்கள்.

பின்னர் இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த துறவியான விபுலானந்த அடிகள் ராஜா அண்ணாமலை வள்ளல் விருப்பத்திற்கேற்ப 1931-ம் ஆண்டு முதற் பேராசிரியராகப் பதவியேற்றார்கள். இவர்கள் காலத்தில்தான் தமிழ்ச் சிறப்பு வகுப்பு (பி. ஏ. ஆனர்ஸ்) தொடங்கப்பெற்றது. தமிழ்பி.ஏ. ஆனர்ஸ் வகுப்பிற் பயின்ற மாணவர்கள் முதன் முதலாக 1934-ம் ஆண்டில் பட்டம் பெற்றனர். தமிழ்ச் சிறப்பு வகுப்பு மாணவர்கள் மெய்ப்பொருள் நூல்களும் பயிலத் தொடங்கினர். பி. எஸ். ஸி. படிக்கும் மாணவர்கள் ஆங்கிலம் நீங்கலாக மற்றொருமொழி படிக்க வேண்டும் என்று திட்டம் செய்யப் பெற்றமையால் தமிழ்கற்கும்வாய்ப்பு, பி.எஸ்ஸி., மாணவர்களிற் பெரும்பாலோருக்கும் கிடைப்பதாயிற்று. விபுலானந்த அடிகள் இங்கிருந்தபொழுதுதான் தமது ஒப்பற்ற இசையாராய்ச்சி நூலாகிய யாழ் நூலேஇயற்றத்தொடங்கினார்கள்.

பின்பு 1933-ம்ஆண்டிலிருந்து ஐந்தாண்டுகள் திரு எஸ். சோமசுந்தர பாரதியார் எம். ஏ., பி. எல். தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார்கள். இவர்கள் இங்குப் பணிபுரிந்தபோது தொல்காப்பியப்பொருளதிகாரத்துக்குப் புத்துரை கண்டு, தொல்காப்பிய உரையாசிரியர் வரிசையிலே தாமும் ஒருவரானார்கள். தாம் இயற்றிய 'மாரி வாயில்' என்னும் நூலை அக்காலத்தில் வெளியிட்டனர். அந் நூல், வள்ளல் அண்ணாமலை அரசர் உரிமையாக்கப்பெற்றது. இவர்கள் மேலும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் ஆங்கிலத்தில் எழுதினார்கள். இவர்களுக்குப் பல்கலைக் கழகத்தார், வெள்ளி விழாவன்று டாக்டர் பட்டம் வழங்கியிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவர்கள் தலைவராய் இருந்தபோதுதான் தமிழ் ஆராய்ச்சித் துறை தோன்றியது.

(சுதேசமித்திரன்)

# அறிஞர் பெர்னட்ஷா

(ப. ச. பொ. விசுவநாதன், சின்னலப்பட்டி.)

ஆகாயமளாவிய அழகிய மாளிகைகள்; அகன்ற வீதிகள்; அரசாங்க அலுவலகங்கள். காண்போர் கண்களைக் கவரும் கட்டிடங்கள். மாளிகை வாசிகளின் மாலைநேரப் பொழுது போக்கு மலர் வனங்கள்; ஆம். அயர்லாந்தின் கோ நகர் "டப்ளினைத்" தான் கூறுகிறேன். அயர்லாந்தின் அழகு நகராக மட்டும் விளங்கவில்லை டப்ளின். அறிஞர்களைப் பெற்றெடுத்த பேறுடையதாகவும் விளங்கியது.

டப்ளின் நகரத்தின் ஓர் வீடு. ஆம் அது ஓர் அரசாங்க உத்தியோகஸ்தரின் வீடு. அந்த உத்தியோகஸ்தரின் மனைவி ஓர் ஆண் மகவை ஈன்றெடுத்தாள். ஆண் மகவு என்றதும் அந்த அன்னை அளவிடற்கரிய அகமகிழ்ச்சி அடைந்தாள். ஆருயிரே, அன்பின் அவதாரமே, கண்ணே, கண்ணின் மணியே, மாசற்ற மாணிக்கமே, என் ரத்தினமே என்று கூறிக் கொஞ்சினள்; குலவினள்; முத்த மீந்தாள்; ஆனல் அடுத்த வினடி ஐயோ கண்ணே குடிகாரன் மகனைகப் பிறந்தாயே, குடிசையிலே நல்லார் ஒருவனுக்கு மகனக இருந்திருந்தாலும் நல்ல முறையில் வாழ்வாயே, தந்தையின் குணம்தான் மகனுக்கும் வரும் என்று உலகத்தார் உரைக்கிருர்களே, அதை நீ நிரூபித்துக் காட்டிவிடுவாயோ! குடிகாரன் மகன்! சூதாடியின் மகன் என்று இகழ்வார்களே இவ் வையத்தார் எனப் பலவாறு கூறிக் குமுறினள்.

"அம்மா நீ அழ வேண்டாம். தந்தை குடி வெறியனகவும், சூதாடியாகவும் இருந்தால் தனயனும் அவ்வாறு இருப்பான? அறிவற்றவனுக்குப் பிறந்த மகன் அவனி புகழும் அறிவாளியாக வந்த அறிஞர்களின் சரித்திரங்களை நீ கண்டதில்லையா? முள்ளில் ரோஜா இருப்பதில்லையா? சேற்றிலே தானே செந்தாமரை முளைக்கின்றது. அன்னையே அஞ்சவேண்டாம். உலகத்தறிஞர்கள் போற்றும் உத்தமனக வருகிறேன். பீடித்திருக்கும் வறுமையை வாட்டமடையச் செய்கிறேன்." என்று அக் குழந்தை அன்னையிடம் கூறவில்லை அப்போது.

இவன் ஓர் அவனி மெச்சும் அறிஞனக ஆவான். உலக அறிஞர்களின் பட்டியலிலே இவனுக்கு இடமுண்டு. அறிஞனைப் பெற்றெடுத்த பெருமை எனக்குண்டு என்று அந்தத்தாய் அப்போது நினைக்கக்கூட இல்லை. ஆனல் அக் குழந்தை பெரியவனக ஆகி லண்டன் மாநகரில்

இருக்கும்போதுதான் தெரிந்தது அந்த அன்னைக்கு.

தந்தை ஓர் குடியன். குடும்பத்தை நன்கு நடத்தாது குடிப்பதும் சூதாடுவதும் தான் அவன் பழக்கம். இதுகண்ட உற்றார் உறவினர் இவனை உலுத்தன், உதவாக்கரை, எனப் பல இகழ்ச்சிப் பெயர்கள் ஈந்து ஒதுக்கினர். அவனை மட்டு மல்ல, அவன் குடும்பத்தினரையும் கூட. மனைவி மாண்பு தரும் சொற்களைக் கூறியும் மாற்ற முடியவில்லை அவன் மனதை. இந்நிலையில் அம்மகவு அவதரித்தது. அம் மகவே அறிவுலகச் சிற்பி அறிஞர் பெர்னாட்ஷா. அக்குடிவெறியன் தான் ஷாவின் தந்தை ஜார்ஜ் கார்ஷா.

அரசாங்க அலுவலகத்தில் அலுவல் பார்த்தார் ஜார்ஜ கார்ஷா. இசைக் கலையில் பற்றுடையவர். இவருக்குப் பெர்னாட்ஷாவும் மற்றும் இரு பெண்களும் உண்டு. இவரின் குடும்பமே இசைக் கலையில் பற்றுக்கொண்டதாகும். ஷாவின் தாயாருக்கு இசைக் கலையில் பயிற்சி உண்டு. எனவே இதன் பயனாக ஓரளவு பொருள் தேடிக் குடும்பத்தை நடத்தி வந்தார்.

சில ஆண்டுகளில் ஜார்ஜ கார்ஷா பார்த்து வந்த வேலையிலிருந்து நீக்கி விட்டனர் அரசாங்கத்தார். அப்போது அரசாங்கத்தார் கொடுத்து வந்த பென்ஷன் தொகையைக் கொண்டு வேறு ஒருவருடன் சேர்ந்து கூட்டு வியாபாரம் செய்து வந்தார்.

இசைக் கலையினால் வரும் வருமானத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்த முடியவில்லை. மிகவும் இன்னலிலே தாக்குண்டு தவித்தது ஷாவின் குடும்பம். தாங்கொணு இடுக்கண் கண்டும் ஷா மனம் தளரவில்லை. **"இடுக்கண் வருங்கால் நகுக அதனை அடுத்தூர்வது அஃது ஒப்பது இல்."** என்னும் வள்ளுவரின் வாய்மொழிக் கிணங்க உணர்ந்து வாழ்ந்தார்.

ஷா முறையாகப் பள்ளி அணுகிப் பயில முடியவில்லை. காரணம் பண நெருக்கடி தான். தம் கூர்ந்த மதியின் பயனாக ஐரோப்பிய நாட்டுக் கவிஞர் பெர்ஸி பெஸி, ஷெல்லி போன்றோரின் கவிகளையும், கருத்துரைகளையும் கற்பனைக் காதைகளையும் பகுத்தறிவோடு ஆய்ந்து பயின்று வந்தார். ஷெல்லி டால்ஸ்டாய் போன்றோரின் கவி நலத்தைக் கண்டு இன்புறுவார். இப்படிப்பட்ட அறிஞர், கலைஞர் கவிஞர் போன்றோரின் அறிவு நூல்களை ஆர்வத்துடன் கற்றதினால் தான் ஷா பிற்காலத்தில் பேரறிஞராக விளங்க முடிந்தது. ஷா இசையிலும் ஓவியத்திலும் நல்ல பயிற்சி பெற்றிருந்தார். தம் தாயாரின் திரு வுருவத்தைத் தானே தீட்டியிருக்கிறார்.

இவ்வாறு கலைத்துறையிலும் கல்வித் துறையிலும், அறிவுத்

துறையிலும் சிறப்புப் பெற்று வந்த ஷா ஓர் ஜமீன்தாரிடத்தில் கணக்காராக அமர்ந்தார். செய்வன திருந்தச் செய்து நல்ல ஊதியம் பெற்றார். என்றாலும் அறிவுலகத்தில் பணியாற்ற வேண்டிய ஷாவுக்குக் கணக்கர் வேலை பிடிக்கவில்லை. எனவே விட்டு விலகினார். பற்பல அறிஞர்களுக்கு நல் வரவேற்பளித்த பார்மெச்சும் இலண்டன் மாநகரைக் காணவேண்டும் என அவாக் கொண்டார். பிரஞ்சு நாட்டறிஞர் ரூசோவை லூயி மன்னன் துரத்திய போதும் அறிஞர் ரூசோவை அழைத்து ஆதரவு தந்து சிறப்புச் செய்த செழிப்பு மிகு இலண்டனைக் காண விரும்பினார்.

இலண்டன் நகர் அடைந்தது முதல் அவரின் அறிவு, அகத்திலிருந்து அறிவுலகத்திற்கு வரத் தொடங்கியது. ஷா அவர்கள் ஒவ்வோர் நாளும் குறித்த காலத்தில் குறிப்பிட்ட அளவு எழுதுவது என்னும் பழக்கத்தைக் கொண்டார். இவ்வாறு பழக்கப்படுத்திக் கொண்ட காரணத்தினால் ஆண்டுக்கொரு நாவல் வீதம் ஐந்து நாவல்களை எழுதினார். அறிவு நூல்களையும் நாவல்களையும் எழுதினார் ஷா. 1885-ம் ஆண்டில் 112 பவுன் வருமானம் பெற்றார். இது ஷாவின் தளரா ஊக்கத்தையும் உழைப்பையும் உழைப்பின் திறமையையும் அறிவின் ஆற்றலையும் அறிவிக்கும். இவ்வாறு ஷா எழுத ஆரம்பித்தது முதல் வறுமை விடை பெற்றுச் சென்று விட்டது.

நாவலின் மூலமாக நாட்டின் நலிவை நசுக்க முடியாது என்றும் நாடகங்கள் அதற்கு அதிகத் துணை புரியும் என்றும் நம்பினார். அன்று முதல் நாவல் எழுதுவதை விட்டு விட்டு நாடகங்கள் எழுதத் துவங்கினார். நாட்டின் நலனைப் பேணி சமூகத்தில் நடக்கும் எல்லை மீறிய தொல்லைகளையும் அதனின்றும் விடுதலை பெறும் விதத்தையும் விளக்கினார். தனிப்பட்ட மனிதனின் வாழ்வில் நடைபெறும் இன்னல்களையும் இன்னல்களை அழிக்கும் மார்க்கத்தையும் நாடகத்தில் இடம் பெறச் செய்தார்.

“இல்லக் கிழத்தியை இழந்தவரின் இல்லங்கள்”, “மனிதனும் உயர் நிலை மனிதனும்”, “கான்திடா” முதலிய நாடகங்களை ஒன்றன் பின் ஒன்றாக வெளியிட்டார்.

இவ்வரிய நாடகங்கள் நாட்டிலுள்ள நாடகமேடையில் நடந்து புகழ்பெறத் தொடங்கிய பின்னரே ஷாவின் புகழ் உலகில் பரவத் தொடங்கிற்று. நம் நாட்டில் நல்லறிஞர்களுக்கு மதிப்புக் கொடுப்பது கிடையாது. பெரிய பெரிய கருத்துக்களைக் கூறினாலும் நாடக மேடையில் நடத்திக் காட்டினாலும் ஏட்டில் தீட்டி விளக்கினாலும் மதிப்பில்லை. மாறாகப் பழிக்கின்றனர். ஆனால் மேல் நாடுகளில் அறிஞர் அல்லது விஞ்

ஞானி மற்றும் ஏதாவதொன்றில் சிறப்புப் பெற்றுள்ளவனாக எத் தேசத்தவனாக இருந்தாலும் "நோபல்" பரிசு போன்றவை களைக் கொடுத்துச் சிறப்புச் செய்கின்றனர்.

பெர்னாட்ஷாவின் பேருரை களையும், அவர் ஆக்கிய அறிவு புகட்டும் நாடகங்களையும் நாவல் களையும், நல்ல கவிதைகளையும் கண்டவர் அனைவரும் கொண்ட னர் மகிழ்ச்சி. ஒப்பற்ற அறி ஞன் என்று கூறி வாயார வாழ்த் தினர்.

ஷாவின் தந்தை ஜார்ஜகார்ஷா தம் இல்லம் வந்தால் இழிவு என்று எண்ணியவர்கள், பெர் னாட்ஷா தம் வீட்டிற்கு வரமாட் டாரா என ஏங்கினர். ஷா செல் லும் இடமெல்லாம் சிறப்பான வரவேற்புக் கிடைத்தது; வர வேற்புரை வழங்கினர். வாழ்க ஷா என வாழ்த்துரை வாசித் தளித்தனர். ஷாவின் தந்தை யைத் திட்டிய வாயால் ஷாவை மனமாரப் புகழ்ந்தனர்.

ஷா அந் நாட்களில் ஆற்றிய சொற்பெருக்கு உலகமாந்தருக்கு ஒப்பற்ற அறிவுரையாக இருந் தது. ஆயிரக்கணக்கான மக்க ளின் முன்னிலையில், அன்பர் பர்களே என அழைத்து "என் விருப்பம் மக்கள் நன்னிலையில் வாழவேண்டும் என்பது தான். அதற்கு மக்கள் தங்களைத் தாங் களே தயார் செய்து கொள்ள வேண்டும். பிறரை நம்பி வாழ் வதல் மடமையாகும். உழைப்பே உயர்வு தரும் என்பது எப்போ தும் மனதில் இருக்கவேண்டும். உழைப்பால் உயர்ந்த பல அறி ஞர்களைப் பார்த்திருக்கிறோம். அவ்வறிஞர்களின் வரலாறுகள் நமக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும். நீதிக்கு அஞ்சி நேர் மையை நிலைநாட்ட வேண்டும். பல இன்னல்கள் வாழ்க்கையில் ஏற்படலாம். அதற்காக மாய் வது என்பது மடமையாகும். வாழ்க்கை வாழ்வதற்கே எனும் மனப்பான்மை நம்மிடையேவளர விடவேண்டும்"; எனப் பல அறி வுரைகளை வழங்குவார் வரவேற் புக்கு நன்றி செலுத்தும் முகத் தான்.

இல்லறத்தை நல்லறமாக்க நங்கை நல்லாள் ஒருவரை மணந் தார். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் இழிகுணம் இவரிடம் இல்லை. ஷா அன்பின் இருப்பிடம்; அறநெறியின் பிறப் பிடம். விலங்குகளைக் கொன்று உண்பது இவருக்குப் பிடிக்காது. ஆங்கிலேயர் அதிகமாக மாமிசம் உண்பர் எனினும் ஷா இதனை அறவே வெறுத்தார். அவருக் கேற்ற உணவு காய்கறி. சமயத் துறையில், அவரின் போக்கு தனிப்பட்டது.

பிச்சைக்காரனுக்கு உதவி செய்தால் பிச்சைக்காரர் அதிக மாவர்; சோம்பேரித்தனம் நாட் டில் பரவும் என எண்ணியோ என்னவோ பிச்சைக்காரனுக்கு உதவி செய்யமாட்டார்.

ஷா அவர்கள் யாரிடமும் நகைச்சுவை ததும்பப் பேசுவார்.

சிலரை ஏசும்போதுகூட நகைச் சுவையுடன் வேடிக்கையாகப் பேசுவார்.

பெண்களே நாட்டின் கண்கள். கண்ணுடையவன் இவ்வுலகத்தை நன்கு காணமுடியும். ஆனல் கண்ணில்லாதவன் வையகத்தைப் பார்க்கமுடியாது. மேலும் எக் காரியத்தையும் செவ்வனே செய்ய முடியாது. அது போல் பெண்கள் முன்னேற்றமில்லாதிருந்தால் நாடு நலம் காணமுடியாது. பெண்கள் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் எனக் கொண்டு அதில் மிகக் கவனம் செலுத்தி வந்தார் பெண்கள் முன்னேற்றத்தில்.

"கண்மூடிப் பழக்கங்கள் மண் மூடிப் போக" என்பது கவிதை. இதை ஷா மிகவும் வற்புறுத்தினார் மக்களிடம். பழைய பழக்க வழக்கங்கள் அவ்வாறே இருக்க வேண்டும். அதை மாற்றக் கூடாது என்றனர் பழமை விரும்பிகள். இக்கூற்றை வெறுத்தார் ஷா. "பயனற்ற பழக்க வழக்கங்களை விலக்கிக் காலத்திற்கும் கருத்திற்கும் பயன்படும் வகையில் மக்கள் தங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொள்ளவேண்டும்" என்பது அவர் சிந்திய பொன்மொழி.

"கெட்டுப்போனபொருள்களை நன்ருகக் காப்பாற்ற முடியாதது போல பழமையானவற்றுள் அறிவுக்கு ஒவ்வாதவற்றை நீக்கினலன்றி நல்ல திட்டங்கள் நாட்டில் நிலைத்திருக்க முடியாது" என்பது ஷாவின் தேன் துளி.

1950-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 2-ம் நாள் எங்குப் பார்த்தாலும் கண்ணீர்வெள்ளம். ஐரோப்பிய மக்கள் ஆற்ருத் துயரில் ஆழ்ந்தனர். அறிவு ஒளி அணைந்துவிட்டதே, அறிவுதர இனியார் இருக்கிருர்கள் என அயர்லாந்து மக்கள் மனமொடிந்தனர். ஆம் அறிஞர் பெர்ஞட்ஷாவின் ஆவி பிரிந்தது. ஆனல் அவர் ஆக்கிய 50-க்கும் மேலான நாடகங்களும் நாவல்களும், அறிவுக் கருத்துக்களும் இன்னும் பொன் ஒளி வீசிப் பொலிகின்றன. —"சௌபாக்கியம்"

---

## பொன் மொழிகள்

காதல் முடிச்சு போட்டுக் கொள்ளும்போது, மற்ற கட்டுகளை யெல்லாம் தளர்த்தெறிந்து விடுகிறது.

— கதே.

பெரிய பெரிய கஷ்டங்கள் பட்ட பிறகுதான் சிறிய உண்மைகள் புலப்படுகின்றன.

— பாரதியார்.

ஒருவன் தான் நினைப்பவைகளை எல்லாம் எல்லாவிடங்களிலும் கூறிவிட எண்ணலாகாது.

— டால்ஸடாய்.

# உப்போ உப்பு!

[எச். எல். ஹாட்லி, எம். டி.]

"உப்போ உப்பு!" என்று எங்கள் வீட்டிற்கு வரும் உப்புக்காரி கூப்பிட்டதும், இந்தக்கட்டுரையை எழுத ஆரம்பித்தேன். காற்று, தண்ணீர், சூரிய வெளிச்சம் இவை மனிதனுக்கு உணவு கிடைப்பதற்கு உதவுகின்றன. மிருகங்கள் உயிர் வாழ்வதற்கு தாவரங்கள் ஆதாரமாகின்றன. தண்ணீர், கரியமிலவாயு இவை தாவரங்களின் இன்றியமையாத தேவை. ஆயினும் சிலவகை உணவுகள் யாவருக்கும் ஒன்று போலவே தேவையாகின்றன. இவை இன்றியமையாதன. இவை உலோகபதார்த்தங்களே. தாவர, மாமிச உணவினின்று இரும்பு, கால்ஸியம், பாஸ்பரஸ் இவை போன்ற பிற பொருட்கள் மனிதருக்குக் கிடைக்கின்றன. பூமியினின்றுவிளைவாகிநேரடியாகஉணவாகும் பொருள் உப்புத் தான். இது ஒன்று தான் சுத்தமும்மலிவுமாக எங்கும் கிடைப்பதாக உள்ளது. பழக்கத்தில் வெகு நாளாக இருந்து விட்ட ஒரு பொருளின் உபயோகத்தை நாம் அது இல்லாமல் தீராதது தான் என்று எண்ணிக் கொண்டாலும், அதற்குரிய உண்மையான மதிப்பைக் கொடுக்க இணங்குவதில்லை. என்னே மானிட மனத்தின் மடமை! இதென்ன, பிரமாதமாவென்று அலட்சியமாக இருந்து விடுகிறோம்.

மார்கோபோலோ என்னும்இத்தாலிய யாத்திரீகர் சீனர்கள் உப்பைமிகுதியாக உபயோகித்து வந்தனர் என்றும், கடல் நீரைக் காய்ச்சி உப்பு எடுத்து வந்தனர் என்றும் தமது குறிப்புகளில் எழுதிவைத்துள்ளார். கடலாடுவதில் விருப்பமுடைய பினீஷியர் மத்திய தரைக்கடல் பகுதியில் கடல் நீரைக் காய்ச்சி, உப்பு எடுத்து, வர்த்தகஞ் செய்து வந்தனர். கிரேக்கருக்குள்ளே உப்பைக் கொடுத்து, அடிமைகளை விலைக்கு வாங்கும் பழக்கமும் "உப்பு விலை கூட பெற மாட்டான்" என்று கூறும் வழக்கச் சொல்லும் வழங்கிவந்திருக்கிறது.

ரோம ராஜ்யத்தின் சேனையில் போர் வீரர்களுக்குக் கொடுக்கப்பட்ட சம்பளத்தில் ஒரு பகுதி உப்பு. இதற்கு "சாலேரியம்" என்ற பெயர் வழங்கினது. ஆங்கிலத்தில் சம்பளம் என்று பொருள்படும் "சாலரி" என்ற சொல் இதனின்று மருவியதே. ஆப்ரிக்காவின் சில பகுதிகளிலும், பசிபிக் தீவுகள் சிலவற்றிலும் வேலைக்கு ஊதியமாக உப்பைக் கொடுக்கும்பழக்கம் இன்னமும் நடைமுறையில் இருந்துவருகிறது. ரோம நாகரீகம் பரவிய பொழுது உப்பை மனிதர் அதிகமாக உபயோகிக்க ஆரம்பித்தனர். ஆயினும் மத்திய தரைக்

கடல் நீரிலிருந்து எடுக்கப்பட்ட உப்பு முதல் தரமாக இல்லை. விற்பனையாகும் இடங்களுக்கு அதனை எடுத்துச் செல்லுவதும் இலகுவில் கூடியதாக இல்லை.

ரோமர் ஐரோப்பியாவின் பல பகுதிகளை வென்று தங்கள் சைன்யங்களை அக் கண்டத்தினூடாக நடத்திச் சென்றபோது ஜெர்மனியில் நில உப்பு இருப்பதைக் கண்டார்கள். போலந்து தேசத்தில் இது மிகுதியாக இருந்தது. கடந்த ஈராயிரம் வருடங்களாகத் தோண்டி யெடுக்கப்பட்டும், இன்றைக்கும் பிரம்மாண்டமான சல வைக்கல் கட்டிடங்கள் போன்று தோற்ற மளித்து நிற்கும்போலந்தின் பெரிய உப்புச் சுரங்கங்களே இவையாகும். உப்பை உற்பத்தி செய்து, பயன்படுத்தும் முறையைத்தாங்கள் சென்ற இடமெல்லாம் மக்களுக்கு ரோமரே கற்பித்தனர். ஆஸ்திரியாவின் உப்புக் கேணிகளில் மலைகளினின்று ஓடி வரும் நீரூற்றுகளைத் திருப்பி ஓட விட்டு, கரைந்த உப்புநீரைப் பாத்திகள் வழியாகப் பள்ளத் தாக்குகளில் உள்ள உப்பளங்களுக்குக் கொண்டு சென்று, அங்கே அதனைச் சுத்திகரித்து கட்டியான உப்பாக மாற்றும் முறையைக் கற்றுக் கொடுத்ததே ரோமர் தாம். இன்றும் அவ்விடங்களில் உள்ள ஜனங்கள் அதே முறையைப் பின் பற்றி உப்புச் செய்து வருகிறார்கள்.

இடைக்கால நூற்றாண்டுகளில் குடும்பங்களில் விருந்துகளின் போது பிரபுத்துவமுடையோர், வள்ளல்கள் இவர்களைக்குறித்துக் காட்டுவதற்கு உப்பு பயன் பட்டது. பிரம்மாண்டமான ஜாடிகளில் கட்டி உப்புபத்திரப்படுத்தி வைக்கப்பட்டு, பல தலைமுறைகளாக இருந்து வரும். வீட்டிற்கு ஏதாவது விசேஷங்களில் கலந்து கொள்வதற்கு வரும்போது பிரதான விருந்தாளியை உப்பு ஜாடிகள் வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு மேலாக உயர்வாக இருக்கும் இடத்தில் உட்கார வைத்து, கீழே வேலைக்காரர், சாதாரணமானவர்கள் உட்காருவார்கள்.

அநேக நாடுகளிலே உப்பு விற்பனையையும் உற்பத்தியையும் அரசாங்கமே ஏற்று நடத்தியதாகவும் அறிகின்றோம். அரசாங்கத்திற்கு அபரிமிதமான லாபம் உப்பு விற்பனையால் கிடைத்து வந்தது. சில தேசங்களில் கட்டாயமாக அரசாங்கத்தினிடமிருந்து உப்பை விலைக்கு வாங்கியாக வேண்டும் என்று ஜனங்கள் நிர்ப்பந்திக்கப் பட்டனர். மிகக் குறைவான அல்லது மிக அதிகமான அளவில் உப்பை உபயோகிப்போருக்கு அதிகத் தீர்வையும் அபராதமும் போடப்பட்டு கட்டாயமாக வசூல் செய்யப்பட்டது. அரசாங்க அனுமதியின்றி உப்புக் காய்ச்சியவர்கள் மிகவும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

1789-ம் ஆண்டிலே "காபெலி" என்று அழைக்கப்பட்ட உப்பு வரியின் விளைவாக, பிரஞ்சு நாட்டிலே பெரும் புரட்சி ஏற்பட அஸ்திவாரம் போடப்பட்டது.

சுதந்திரப் போராட்டத்தின் போது இந்தியாவிலே மகாத்துமா நடத்திய உப்பு சத்தியாக்கிரகத்தையும், தொண்டர்களுடன் சென்று அவரே நேரில் உப்புக் காய்ச்சியதையும் இதற்குள்ளாகவா மறந்து போய் விட்டீர்கள்? இல்லையென்றால், நம் நாட்டிலும் புரட்சிக்கு நாம் அனுதினமும் உபயோகிக்கிற இந்த உப்பு ஒரு காரணமாக இருந்தது என்னும் உண்மை உங்களுக்கு ஆச்சரியமாக இருக்காதே!

மனிதன் உயிர் வாழ்வதற்கு உப்பு அத்தியாவசியமான தேவையென்று பல வேறு காரணங்களால் நாம் கூற முடியும். நமது உடலில் உள்ள இரத்தத்தில் நூற்றுக்கு மூன்று பங்கு உப்புத் தான். இரத்தத்தில் இது போதுமான அளவு இராவிடில், இரத்த வோட்டம் சரியாக இருக்காது.

குடலிலுள்ள ஜீரண சுரப்பிகள் சரியாக வேலை செய்வதற்கு உப்பிலுள்ள குளோரைன் உதவுகின்றது. உணவில் உப்பு இல்லாவிடில் ஜீரணமே ஆகாது.

சிறு நீர்ப்பிரித்திகள் தங்கள் வேலையைச் செய்யும் போதும், உடல் வியர்க்கும் பொழுதும் உப்பு தேகத்தினின்று வெளியாகிறபடியால் தேவையான உப்பு உடலில் சேருமாறு நாம் அளவுடன் உப்பை ஒழுங்காக உபயோகித்து வர வேண்டும். களைப்பு, வலி, இழுப்பு, இசிவு முதலிய பல நோய்கள் உடலில் உப்புக் குறைவினால் ஏற்படுவதுண்டு. உப்பின் மகத்துவத்தைக் குறித்து உதாரணமாக ஒரு சம்பவத்தைக் குறித்துச் சொல்லுகிறேன், சற்று கேளுங்கள். மிகவும் ஆழமானதொரு சுரங்கத்திலே எப்பொழுதும் சென்டிகிரேட் தர்மாமீட்டரில் 40 தான சீதோஷ்ண நிலைமை இருந்து வரும். (பாரன்ஹீட் 104). முதலில் அநேக தொழிலாளிகளுக்குத் தாங்க முடியாத அளவில் தலைவலி அடிக்கடி ஏற்பட்டது. காரணம் தெரியவில்லை. ஆஸ்பத்திரிக்கு அநேகர் சிகிச்சைக்காகப் போன போது, டாக்டர்கள் பல மருந்துகளைக்கொடுத்துப் பார்த்து முடிவில் குறிப்பிட்ட அளவு அதிகப்படியான உப்பை மாத்திரையாகவோ தண்ணீரில் கரைத்தோ சாப்பிடும்படி சொன்னார்கள். மந்திர சக்திக்குப் பாம்பு கட்டுப்படுவது போல தலைவலி கட்டுப்பட்டு, மறுபடி வந்து எட்டிப் பார்க்கக்கூட வில்லையாம்!

ஆனால் உப்பு மிகுதியாக உபயோகிப்பது சிறுநீர்ப் பிரித்திகளைக் கெடுக்கும். சில வியாதியஸ்தருக்கு சாதாரணமாக நாம் அனுதினமும் உபயோகித்து வரும் அளவு உப்பு கூட கெடுதியாகிறது. உப்பைக் குறைத்து உபயோகித்த பின், அந்த வியாதியஸ்தர்களுடைய உடல் நலம் அபிவிருத்தி அடைந்து வருகிறது. ஆனால் இவ்வளவு காலம் உப்பு ருசி கண்ட மூளைகள் எப்படி உப்பு சரியாகப் போடாமல்

சாப்பிடுவார்கள்? அப்படிச் சாப்பிட அவர்களுக்கு ரொம்பவும் கஷ்டமாகி விடுகிறது. சாப்பாடே செல்லுவதில்லை. இவர்களுக்காக ரசாயன சாஸ்திரத்தின்படி உப்பின் ருசி, வாசனை மாத்திரம் சோறு கறிபதார்த்தங்களில் இருக்கத் தக்கதாக புது மாதிரியாக சாரமற்ற உப்பை ஆராய்ச்சிக்காரர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். என்ன, உங்களுக்குச் சந்தோஷம் தானே!

உப்புப் பாறை பூமியில் அநேக இடங்களில் உள்ளது. இப்பாறைகள் தேய்ந்து, உருமாறும் பொழுது, அவற்றின் மீதுள்ள உப்பை மழை கரைத்து, ஓடைகள், வாய்க்கால்கள், ஆறுகளில் சேர்த்து அடித்து சமுத்திரத்திற்குக் கொண்டு செல்லுகிறது. அங்கு சென்றவுடன், மறுபடியும் தண்ணீர் மட்டும் ஆவியாக மாறி, மேகத்துடன் சேர்ந்து, மழை பெய்து பூமாதேவியிடமே திரும்புகிறது. உப்பு மாத்திரம் கடலில் சேர்ந்துகொண்டு வரும். இப்படிச் சேர்ந்த உப்பு கடல் நீரில் நூறு பவுண்டு எடுத்துக்கொண்டால், மொத்தத்தில் மூன்றரைப் பவுண்டுகள் இருக்கிறது. மொத்தம் எவ்வளவு உப்பு கடல் நீரில் இருக்கிறதென்னும் புள்ளி விவரங்கள் நம்மை அப்படியே தூக்கி வாரிப்போடுகின்றன. அடேயப்பா என்று மூக்கில் வியக்குமாறு, மொத்தம் ஏறக்குறைய 50,000,000,000,000,000 டன்கள் தான் இருக்கிறதாம்! உங்கள் உயரத்தை அளந்துவிட்டு, உடனே உலக முழுவதுமுள்ள நிலப் பரப்பில் உங்கள் பாதங்களுக்குக் கீழே இந்த உப்பு முழுவதையும் பரப்பினால், நூறு அடிகள் தான் அதிகமாக வளர்ந்திருப்பீர்கள்!

—"நல்வழி"

---

## கல்வித்தரம்!

இந்தியாவின் 36 கோடி ஜனத்தொகையில், சாதாரணமாக எழுதப் பேசத் தெரிந்தவர்கள் தொகை 6 கோடிதான்! 30 கோடி பேர் படிப்பு வாசனையற்ற தற்குறிகள்!

அந்த 6 கோடியிலும் 6 லட்சம் பேருக்கு வாசிக்கத்தான் தெரியும்—எழுதத் தெரியாது! அதில் 5 கோடிக்குமேற்பட்டவர்கள் எட்டாவது வகுப்புவரைகூட படியாதவர்கள். 6 கோடியில் 8—வது வரை படித்தவர்கள் 90 லட்சம் பேர். இந்த 90 லட்சம்பேரில் 38 லட்சம்பேர்தான் எட்டாவது வகுப்பு தேறியவர்கள். அந்த 38 லட்சம்பேரில் 16 லட்சம்பேர்தான் உயர்தரப் பள்ளியை எட்டிப் பார்த்தவர்கள். இந்த 4 லட்சத்து 66 ஆயிரம்பேர் கல்லூரி வாசலில் கால் வைத்தவர்கள். 11 லட்சத்து 7 ஆயிரம் பேர்தான் பட்டம் பெற்றவர்கள்.

— இது 1951-சர்க்கார் கணக்குப்படி!

# அனைத்திந்திய இரயில்வே புத்தாண்டு வரவு செலவுத் திட்டம்

1955—56-ம் ஆண்டிற்கான இரயில்வே வரவு-செலவுத் திட்டத்தில் சலுகை தரப்பட்டுள்ள சில முக்கிய அம்சங்கள் இங்கு தரப்படுகின்றன :—

**1955 ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து பிளாட்பாரம் டிக்கெட்டை 2 அணுவிலிருந்து 1 அணுவாகக் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.**

உலக யுத்தத்திற்குப் பின், இந்திய ரயில்வேக்களில் மீண்டும் தசரா, தீபாவளி பண்டிகைகளுக்கு 'விடுமுறை நாட்கள்ரிட்டர்ன் டிக்கெட்டு'கள் (போகவும் திரும்பி வருவதற்குமான குறைந்த கட்டண டிக்கெட்) கொடுப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களுக்காக விடப்படும் 'தனி இரயில்'களில், மாணவர்கள் எண்ணிக்கை 400-க்குக் குறையாமலிருந்தால், சாதாரணமாக விசேட இரயில்களுக்குவசூலிக்கப்படும் குறைந்தபட்சக் கட்டணங்கள் அவர்களிடம் வசூலிக்கப்படமாட்டா.

மாணவர்களுக்கு அளிக்கப்படும் இக்கட்டணச் சலுகை, மாநில சர்க்கார்களின் ஆதரவில் சுற்றுப்பிரயாணம் செய்யும் 'விவசாயக் குழு'விற்கும் அளிக்கப்படும்.

400-க்குக் குறையாத மாணவர்களின் பிரயாணக் குழுவினருக்கு அளிக்கப்படும் சலுகை விகித 'சுற்றுப் பிரயாண டிக்கெட்டு'கள், இனிமேல் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும், நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் தரப்படும்.

தேசிய விஸ்தரிப்புச் சேவைகள் நடைபெறும் இடங்களுக்குச் சென்று அங்கு ஊதியம் பெறாமல் தொண்டு புரிய விரும்புகிறவர்களுக்கு அங்கு போகவும், விஸ்தரிப்புச் சேவைகள் செய்த பின்னர் திரும்பு'வர்களுக்கும் எப்போதும்போலுள்ள சலுகைகள் வழங்கப்படும்.

1,500 மைல்களும், அதற்கு மேலும் பிரயாணம் செய்யும் உல்லாசப் பிரயாணிகள், அல்லது யாத்திரைக்காரர் களுக்கான விசேட இரயில் கட்டணம், சாதாரணக் கட்டணத்தில் முக்கால்பங்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## இரயில்வே கட்டண விதிகள்

இதுவரையிலும், இந்திய இரயில்வேக்களில், பிரயாணம் செய்யும் தூரம் எவ்வளவு இருந்தபோதிலும் ஒவ்வொரு மைலுக்கு ஒரே விகிதத்தில் கட்டணம் வசூலிப்பது என்றிருந்த முறை, ஏப்

நல் திங்கள் முதல் தேதி முதல் மாற்றியமைக்கப்பட்டுவிடும்.

இனிமேல் விரைவு வண்டிகள் (எக்ஸ்பிரஸ்) கட்டணம் 150 மைல்கள் வரைக்கும் $6\frac{1}{4}$ தம்பிடியாக்கப்படும். முன்னுல் இக் கட்டணம் 6 தம்பிடியாகக் குறைந்திருந்தது. 151—300 மைல்கள் வரை பிரயாணம் செய்தால் இக் கட்டணம் 6 தம்பிடியாகும். 300 மைலுக்கு மேற்பட்டு பிரயாணம் செய்தால் 5 தம்பிடியாகக்குறைக்கப்படும்.

இதுபோலவே, 3—வது சாதாரண வண்டிகளிலும், முறையே $5\frac{1}{4}$, 5, $4\frac{1}{2}$ தம்பிடி என்று மாற்றி நிர்ணயிக்கப்படும்.

மற்ற வகுப்புகளிலும் இதே முறையில்தான் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

நெடுந்தூரப் பிரயாணத்தில் 3—வது வகுப்புக்குக் கட்டணச் சலுகை உண்டு.

உணவுத் தானியங்கள் போன்ற சில சரக்குகளின் கட்டண விகிதங்களும் சற்றுக்குறைகிறது. அதாவது, மைலுக்கு 2 தம்பிடி அல்லது 301—600 மைல் வரை 7 சத விகிதமாகவும், 600 மைல்களுக்கு மேல் மைல் ஒன்றுக்கு 1 தம்பிடியும் குறைக்கப்படும்.

3—வது வகுப்பு, மித சீதோஷ்ண வகுப்புப்பிரயாணிகளுக்கு, [Air Conditioned room passengers] புதிய இரயில்வே கட்டண விதிகளின்படி விதிக்கப்படும் கட்டணம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

49 மைல்களுக்குட்பட்ட 3—வது வகுப்புக் கட்டண உயர்வு, 1 அணுவிற்குமேல் இருக்காது. 300 மைல்களுக்குக் குறைவான தூரத்திற்கு உயர்ந்தபட்சக் கட்டண உயர்வு 4 அணு.

மித சீதோஷ்ணப் பெட்டிகளில் செல்லுவதானல்,300 மைல்களுக்குக் குறைவான தூரம் பிரயாணம் செய்ய ரூ. $6\frac{1}{4}$ வசூலிக்கப்படும்.

எக்ஸ்பிரஸ் அல்லது மெயில் வண்டிகள் மூலம் பிரயாணம் செய்யும்3வது வகுப்பு பிரயாணிகட்கு விதிக்கப்படும் கட்டணங்கள் முன்னர் இருந்ததைவிட குறிப்பிட்டுள்ள விகிதப்படி குறைக்கப்படும்.

மித சீதோஷ்ணப் பெட்டிகளில் டில்லியிலிருந்து சென்னை வரும் பிரயாணிகள் இனிமேல் அதிகமாக ரூ. 17-4-0 செலுத்த வேண்டியிருக்கும்.

அமுல் நடத்தப்படவிருக்கும் இப்புதிய கட்டண விகிதங்களினுல் 'சீசன்' டிக்கெட் கட்டண விகிதங்களில் மாற்றம் எதுவும் கிடையாது.

பிளாட்பாரம் டிக்கெட் 2 அணுவிலிருந்து 1 அணுவாகக் குறைத்து விட்டதினுலேயே இரயில்வேயிக்கு ரூ. 15 லட்சம் நஷ்டமேற்படுமென்றும் கூறப்படுகிறது.

## இரயில்வே வரவு–செலவுத் திட்டம்

1955—56-ல், இந்திய இரயில் வேக்களின் நிகர உபரித்தொகை ரூ. 7·14 கோடியாக இருக்கும்; நடப்பு ஆண்டிற்குத் திருத்தப் பட்ட மதிப்பீட்டின்படி, நிகர உபரித்தொகை ரூ. 6·57 கோடி யாகும்.

முதல் ஐந்தாண்டுத் திட்ட கால இறுதிக்குள்ளாகவே இர யில்வேக்களின் செலவுகள் ரூ. 418 கோடி ஆகிவிடலாம் என்று தெரிகிறது.

1855—56–ம் ஆண்டில் மொத்த வருமானம் ரூ. 292·50 கோடியாக இருக்கும்; நடப்பு ஆண்டிற்குத் திருத்தப்பட்டவரு மான மதிப்பீடு ரூ. 282·80 கோடியாகும். பிரயாணிகளின் போக்கு-வரத்தின் மூலம் ரூ. 104·50 கோடி கிடைக்கும்;இது, திருத்தப்பட்ட மதிப்பீட்டையும் விட ரூ. 2·7 கோடி அதிகமாகும்.

1955–56-ல், 'கூட்ஸ்' போக்கு வரத்து மூலம் மதிப்பிடப்பட்டி ருக்கும் வருமானம் ரூ. 163·90 கோடியாகும்; இது திருத்தப் பட்ட மதிப்பீட்டையும்விட ரூ. 7·90 கோடி அதிகமாகும்.

அதே நேரத்தில், இந்த அதி கப்படியான வருமானத்திற்கு எதிராக, 'கோச்சு'கள் வருமா னத்தில் ஒரு கோடி ரூபாய் குறையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

1955—56–ம் ஆண்டில் சாதா ரண வேலைச் செலவுகள் ரூ. 206·59 கோடி; இத் தொகையும் திருத்தப்பட்ட மதிப்பீட்டைவிட ரூ. 3·83 கோடி அதிகமாகும்.

திருத்தப்பட்ட திட்டப்படி, தேய்மான ரிசர்வ் நிதிக்கு ரூ. 35 கோடியும், பொது ரெவின்யூ விற்கென ரூ. 36·07 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

விமானங்கள் போக்கு–வரத் தில் இரயில் வசதியையும், கரை யோரக் கப்பல் வசதியையும் இணைப்பது சம்பந்தமாக யோச னைகள் கூறுவதற்கென ஒரு ஆலோசனைக் குழுவும் நியமிக்கப் படும்.

இரயில் விபத்துக்களைத் தடுக்க தண்டவாள இணைப்பு முறை எல்லாப்பகுதிகளிலும் பின்பற்றப் படும்; இதற்காக ஆண்டொன் றுக்கு ரூ. 1 கோடி செலவழிக் கப்படும்.

## இரயில்வே சிப்பந்திகளுக்குக் குடியிருப்பு வீடுகள்

1952—55-ம் ஆண்டுகளில் இரயில்வே ஊழியர்களுக்கென 24,000-க்கு மேற்பட்ட வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டிலும் (1955—56) மேலும் புதிதாக 10,000 வீடு களைக் கட்டுவதற்கான ஏற்பாடு களும் செய்யப்பட்டுள்ளது. இதற்கென இவ்வாண்டில் மொத் தம் 5·33 கோடி ரூபாய் ஒதுக் கப்பட்டுள்ளது.

**பிதன பகுதியில...**

**தாம்பரம் விழுப்புரம்
மின்சார இரயில் பாதை**

தென்பகுதிஇரயில்வேக்களில், தாம்பரத்திலிருந்து விழுப்புரம் வரையிலும் மின்சார இரயில் பாதை போடுவதற்கான திட்டம் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான விவரமான குறிப்புகளும்(பிளான்) செலவுத் திட்டங்களும் தயாரிக்கப்பட்ட பின்னர், இதற்கான வேலைகள் உடனே ஆரம்பிக்கப் படும்.

*சென்னை, பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலையில்இந்த ஆண்டில் (1955-56) 20 கோச்சு வண்டிகள் உற்பத்தியாகும்.*

*ரூ. 70 லட்சம் செலவில் மதுரை-போடிநாய்க்கனூர் மார்க்கமும், ஷொரனூர் — நீலாம்பூர் மார்க்கமும்போடப்படும்.*

*தற்போது மீட்டர் கேஜ் (மத்திய அளவு) பாதையாக இருந்துவரும் கூடூர் — ரேணிகுண்டா மார்க்கம், பிராட்கேஜ (பெரிய அளவு) பாதையாக மாற்றப்படுவதற்கு, 1955—56-ல் 70 லட்சம் ஒதுக்கப்படும்; இப்பாதையின் மொத்த நீளம் 52 மைல்களாகும். இப்பாதையை மாற்றும் திட்டத்திற்கு மொத்தம் 2 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.*

*1955—56-ம் ஆண்டின் பின் பகுதிகளில், கீழ்க்கண்ட இடங்களுக்கிடையே இரயில் பாதைகள் அமைக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி சர்வே செய்யப்படும்:—*

*பெங்களூர்—சேலம்; போக்குவரத்து, எஞ்சினீயரிங் சர்வே.*

*திருவனந்தபுரம் — கன்னியாகுமரி அல்லது திருநெல்வேலி—கன்னியாகுமரி; போக்குவரத்து சர்வே.*

*காட்பாடி—காஞ்சீபுரம் அல்லது வேலூர்—காஞ்சீபுரம்; போக்குவரத்து, எஞ்சினீயரிங் சர்வே.* —"நம்நாடு"

---

## பொன் மொழிகள்

*அறம் அனலைவிட அவசியம். அனலிலும், ஜலத்திலும் மடிந்தவர் உண்டு; ஆனால், அறத்தினால் அழிந்தவர் இல்லை.*

— *கன்பூஷியஸ்.*

*மனிதன் இயற்கையாகவே சாகசமுள்ளவன். ஆனால், அவனுடைய சாகசத் தன்மைக்கு இயற்கை எல்லை கட்டுகிறது.*

— *வி. ச. காண்டேகர்.*

*அன்பு கொண்டவன் என்ன தான் சொன்னாலும் நம்மை அவமானப்படுத்துவதாகாது.*

— *மாக்சிம் கார்க்கி.*

# இந்தியப் பேரரசின் புதிய வரிகள்

இந்திய சர்க்காரின் நிதி மந்திரி திரு. தேஷ்முக் தமது பட்ஜெட் பிரசங்கத்தின் இரண்டாவது பகுதியில் பல வரி மாறுதல்களை அறிவித்தார்.

"சூபர் டைன்" ஜவுளிமீது வரி உயர்வு; வருமான வரியில் மாறுதல்கள்; தொழில்களுக்கு ஊக்கமளிக்கும் முறையில் சில சலுகைகள்; சர்க்கரைமீது உள்நாட்டு வரி அதிகரிப்பு—இவை அவரது திட்டத்தின் முக்கிய அம்சங்கள்.

1. வருமான வரி, "சூபர் டாக்ஸ்" வரி மாறுதல்கள் மூலம் கிடைப்பது 8·7 கோடி (இதில் 4·2 கோடி ராஜ்யங்களுக்குப் போகும் பங்கு. இந்தியா சர்க்காருக்கு மிஞ்சுவது 4·5 கோடி தான்.)

2. ஏற்றுமதி—இறக்குமதி வரி மாறுதல்களால் நஷ்டம் ரூ. 60 லக்ஷம்.

3. சர்க்கரை ஜவுளி உட்பட உள்நாட்டுச் சுங்க மாறுதல்களால் அதிக வருமானம் ரூ. 17·7 கோடி.

வரி மாறுதல் இல்லாவிடில் ரெவின்யூ கணக்கில் துண்டு விழுவது சுமார் 30·17 கோடியாக இருந்தது. வரிக்குப் பிறகு துண்டு விழுவது 8·47 கோடி.

## வருமான வரி மாறுதல்கள்

வருமான வரிக்கு உள்படும் வருமானத்தில் ரூ. 1,500 வரை வரி கிடையாது என்பது இப்பொழுதுள்ள முறை. விவாகமானவர்களுக்கு இனிமேல் ரூ. 2,000 வரை இந்த விதி விலக்கு உண்டு; கல்யாணமாகாதவர்களுக்கு விதிவிலக்கு ரூ. 1,000 வரை தான். (இதனால் வரி நஷ்டம் 90 லக்ஷம்)

ரூ. 7,500-க்கு மேற்பட்டு ரூ. 10,000 வரையுள்ள வருமான அடுக்கிற்கு இப்பொழுதுள்ள வரி விகிதம் அரையணா உயர்த்தப்படுகிறது 0-1-9 லிலிருந்து 0-2-3.

ரூ. 5,000 முதல் ரூ. 10,000 ஒரே அடுக்காக இருந்தது. ரூ. 5,000 முதல் ரூ. 7,500 வரை ஒரு அடுக்கு, ரூ. 7,500 முதல் ரூ. 10,000 வரை ஒரு அடுக்கு என்று பிரிக்கப்படுகிறது.

இதனால் சர்க்காருக்கு கிடைப்பது 1·35 கோடி.

ரூ. 10,000 முதல் ரூ. 15,000 வரையுள்ள வருமானப் பகுதிக்கு இப்பொழுது 3 அணாவாக உள்ள வரி 0-3-3 ஆக உயர்த்தப்படுகிறது.

இதன் மூலம் ரூ. 85 லக்ஷம் அதிகம் கிடைக்கும்.

### "சம்பாத்ய" வருமானத்துக்கு விலக்களிப்பதில் மாறுதல்

"சம்பாதித்த" வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கு அல்லது ரூ. 4000 ஏது சிறியதோ அது—வருமான வரியிலிருந்து "விலக்கப்பட்ட அலவன்ஸாக" இருந்து வருகிறது.

இதில் ஒரு மாறுதல் செய்து 25000-க்கு மேற்பட்ட வருமானத்தில் "விதிவிலக்கு அலவன்ஸ்" படிப்படியாகக் குறைக்கப்படும். 25,000க்கு மேற்பட்ட ஒவ்வொரு ரூ. 1000க்கும் வரி விலக்குத் தொகையிலிருந்து ரூ. 200 குறைக்கப்படும்.

உதாரணமாக ஒருவனுக்கு வருமானம் 30,000 என்றால் வரி விலக்கு 4000 ஆக இருக்காமல் (25000க்கு மேற்பட்ட தொகையான 5000க்காக 1000 ரூபாய் குறைக்கப்பட்டு) ரூ. 3,000தான் வருமான வரியிலிருந்து விலக்கப்பட்ட "எர்ன்ட் இன்கம் அலவன்ஸாகும்."

ஒருவனுக்கு 45,000 சம்பாத்ய வருமானம் இருந்தால் 25,000க்கு மேற்பட்டதான 20,000க்கு ஆயிரத்துக்கு 200 வீதம் 4,000 ஆவதால், விலக்கல் தொகை முழுதும் அடிபட்டுப் போகிறது. கழிவே இருக்காது.

இதனால் கிடைக்கும் அதிக வரி வருமானம் 1·9 கோடி.

வருஷம் ரூ. 18,000க்கு மேல் சம்பளம் வாங்குவோருக்கு கொடுக்கப்படும் அலவன்சுகளில் பல இனி வரிக்கு உள்ளாகும்.

### இன்ஷ்யூரன்ஸ், பிராவிடெண்ட் நிதி ரிபேட்

மொத்த வருமானத்தில் ஆறில் ஒரு பங்கு அல்லது ரூ. 6,000 வரை தான் இன்ஷ்யூரன்ஸ் சந்தா, பிராவிடெண்ட் நிதி ஆகியவற்றிற்குக் கழிவு இருந்து வந்தது. இது ஐந்தில் ஒரு பங்கு அல்லது ரூ 8,000 என்று மாற்றப்படுகிறது.

இதனால் சர்க்காருக்கு 25 லக்ஷம் நஷ்டம்.

### அவிபக்த குடும்பங்கள்.

ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத்தில் பாகப் பிரிவினை கோரும் உரிமையுள்ள பாகஸ்தர்கள் நால்வரோ அதிகமோ இருந்தால் குடும்ப வருமானம் 12,600க்குக் குறைவாக இருந்தால் வருமான வரி கிடையாது.

ரூ. 21,600க்கு மேற்பட்ட வருமானம் இருந்தால்தான் சர் சார்ஜ். இந்த மாறுதலால் ஏற்படும் வரி நஷ்டம் அதிகம் இருக்காது.

### வியாபாரிகளுக்குச் சலுகை

ஒரு வருஷத்து நஷ்டத்தை அடுத்த ஆறு வருஷம் வரை தான் வருமான வரிக் கணக்கில் ஈடு செய்து கொள்ளலாம் என்பது இப்பொழுதுள்ள முறை. இனி காலவரையறையின்றி வருமான வரிக் கணக்கில் ஈடுசெய்து கொள்ளலாம்.

## புது யந்திரங்கள்

புது யந்திரங்களுக்கு 20% "ரிபேட்" இதுவரை கொடுக்கப் பட்டு வந்தது. இனி 25% 'ரிபேட்.'

## மானேஜிங் ஏஜென்ஸி நஷ்டஈட்டுக்கு வரி

ஒருவரது மானேஜிங் ஏஜென்ஸி போய்விடுவதால், அவருக்கு ஏதேனும் நஷ்டஈடு கிடைத்தால், அல்லது உத்யோகத்திலிருந்து நீக்கப்பட்டதற்காக நஷ்ட ஈடு கிடைத்தாலும், அதன் மீது வருமான வரி உண்டு.

## சூபர் டாக்ஸ்

உபரி-வரி (சூபர் டாக்ஸ்) இப்பொழுது ரூ. 25,000க்கு, மேற்பட்ட வருமானத்துக்குத்தான் உண்டு. இனிமேல் ரூ. 20,000க்கு மேற்பட்ட வருமானத்துக்கு சூபர் டாக்ஸ் உண்டு.

இதன் மூலம் சர்க்காருக்கு 5·75 கோடி கிடைக்கும்.

## கம்பெனிகள் வினியோகிக்காத லாபம்

கம்பெனிகள் தமது லாபத்தில் 60 சத விகிதத்தை டிவிடெண்டாக வினியோகிக்காமல் நிறுத்தி வைத்துக்கொண்டால், அவ்வாறு நிறுத்தி வைத்துக் கொண்ட தொகை மீது ரூபாய்க்கு 4 அணா வீதம் "சூபர் டாக்ஸ்" வரி விதிக்கப்படும்.

## சர்க்கரை எக்சைஸ் உயர்வு

சர்க்கரை 'எக்சைஸ்' (உள் நாட்டு சுங்கம்) அந்தர் 1-க்கு ரூ. 3-12-0 ஆக இருப்பது ரூ. 5-10-0 ஆக உயர்த்தப்படுகிறது.

இதன் மூலம் ரூ. 5 கோடி அதிக வருமானம் கிடைக்கும்.

## கம்பளத் துணி

கம்பளத் துணிகள், தையல் மிஷின்கள், மின்சார விசிறிகள், பல்புகள் காகிதம் (பத்திரிகைக் காகிதம் தவிர) பெயிண்டுகள் பாட்டரிகள் விலையின் மீது பத்து சதவிகிதம் புது உள்நாட்டு சுங்க வரி விதிக்கப்படுகிறது.

இதன் மூலம் ரூ. 4 கோடி கிடைக்கும்.

## தேயிலை வரி

தேயிலை ஏற்றுமதி வரியானது ஒரு ராத்தலுக்கு இவ்வளவு என்றிருப்பதை மாற்றி, பல அடுக்குகளாகப் பிரித்து ஒவ்வொரு அடுக்கில் இவ்வளவு விகிதம் என்று ஒரு புது முறையை அனுஷ்டிக்கப் படும்.

## சாயப்பொருள்கள்

சாயம் காய்ச்சுவதற்கான பொருள்கள், பிசின்கள்மீதுள்ள வரிகள் நீக்கப்படும்.

ஆனால் ஏதேனும் ஒரு நாட்டுக்கு அனுகூலமாக சலுகையளிக்க நாம் ஒப்பந்தம் செய்திருந்தால் அந்த அளவுக்குமட்டும் இதர நாட்டிலிருந்து இறக்குமதியாகும் அந்தச் சரக்குகள் மீது வரி போடப்படும்.

## காகிதம் முதலியவற்றிற்கு இறக்குமதி வரி

காகிதத்தால் செய்த சில பொருள்கள் மீதும் விளம்பர

ஸர்க்குலர்கள், மேனாட்டு முறையிலுள்ள சாப்பாட்டுக் கரண்டிகள் முதலியவற்றின் மீதும் இறக்குமதி வரி அதிகரிக்கப்படுகிறது. "ஜிப்—பாஸனர்", பீங்கான் சாமான்கள் முதலியவற்றின் மீதும் இறக்குமதி வரிகள் விதிக்கப்படுகின்றன.

## சிகரெட் வரி

ஆயிரம் சிகரெட்டுக்கு ரூ. 10 வீதம் உள்ளவை மீது 10 சிகரெட்டுக்குக் காலணா சர்சார்ஜும் ஆயிரத்துக்கு ரூ. 15 விற்பவைகளுக்கு அரையணா சர்சார்ஜும் இப்பொழுது இருக்கிறது. இது தற்காலிகமாக ரத்தாகிறது.

இது மற்ற ரகங்களில் நிரவப்படும். ஆயிரத்துக்கு ரூ. 40 முதல் 50 வரை விலையுள்ள சிகரெட்டுகள் விஷயத்தில் அதற்கேற்றபடி சில வரி உயர்வு இருக்கும்.

## தீப்பெட்டிக்கு வரிச் சலுகை

குடிசைத் தொழிலாகவும், நடுத்தர சைஸ் தொழிற்சாலைகளிலும் தயாரிக்கப்படும் 40 குச்சி தீப்பெட்டிக்கு இப்பொழுது குரோசுக்கு ஒரு அணா உள்நாட்டுச் சுங்க சலுகை இருக்கிறது. அந்தச் சலுகை குரோஸுக்கு 2 அணாவாக உயர்த்தப்படுகிறது.

இதற்குப் பொருத்தமாக வேறு ரகங்களிலும் மாறுதல் செய்யப்படுகிறது.

இதனால் சர்க்காரின் வருமானம் 50 லக்ஷம் குறையும். இந்த குறைவில் ராஜ்யங்களின் பங்கு 20 லக்ஷம்.

## இறக்குமதியாகும் சர்க்கரை விலை உயர்வு

## எக்சைஸ் வரி அதிகரிப்பின் விளைவு

மார்ச் 1-ந் தேதி முதல் இறக்குமதியாகும் சர்க்கரையின் விலையை மணங்குக்கு ஒரு ரூபாய் வீதம் உயர்த்த இந்திய சர்க்கார் தீர்மானித்துள்ளதாக இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி விலை உயர்த்தப்பட்டிருப்பதற்குக் காரணம் சர்க்கரைக்கு எக்சைஸ் வரி (உள்நாட்டுச் சுங்கம்) அந்தர் ஒன்றுக்கு ரூ. 3-12-0 ஆக இருப்பது ரூ. 5-10-0 ஆக மார்ச் 1ந் தேதி முதல் உயர்த்தப்படுவதேயாகும். அந்தர் ஒன்றுக்கு கஸ்டம்ஸ் தீர்வை ரூ. 11 ஆக இருந்தது ரூ. 13-ஆக உயர்த்தப்படுகிறது.

ஆகவே சுத்தம் செய்யப்பட்ட பிரிட்டிஷ் சர்க்கரை, கிழக்கு ஜெர்மனி சர்க்கரை, பிரெஞ்சு சர்க்கரை ஆகியவற்றின் திருத்தப்பட்ட துறைமுக வாசல் விலை அந்தர் ஒன்றுக்கு ரூ. 30–8–0 ஆகவும், கியூபா சர்க்கரை அந்தர் ஒன்றுக்கு ரூ. 30 ஆகவும் இருக்கும். புதிய விலைகள் மார்ச் மீ 1-ந் தேதி முதல் 'டெலிவர்' செய்யப்படும் சர்க்கரை வகைகளுக்கும் பொருந்தும்.

## எக்ஸைஸ் வரி 10 சதம் உயர்வு

### பாதிக்கப்படும் உள்நாட்டுப் பொருள்கள் விவரம்

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் 8 இனங்களைச் சேர்ந்த பொருள்களுக்கு அவற்றின் விலை மதிப்புக்குத் தகுந்தவாறு 10 சத விகிதம் எக்ஸைஸ் வரி (உள்நாட்டு சுங்கம்) விதித்திருக்கிறார்கள். இந்த வரி, மார்ச் 1-ந் தேதி முதல் அமலுக்கு வருகிறது. இவ்வாறு வரிவிதிக்கப்படும் பொருள்கள் வருமாறு:—உல்லன் உடைகள், தையல் மிஷின்கள், மின்சார விளக்கு பல்புகள், மின்சார விளக்குடியூபுகள், எலெக்டிரிக் ஸ்டோரேஜ் சாதனங்கள், காகிதம், பத்திரிகைக்காகிதம், பேஸ்ட்போர்டு, கார்டு போர்டு, ஸ்டிரா போர்டு முதலியன.

மேற்கூறிய பொருள்கள் உற்பத்தியாளர்கள் கட்டிடங்களில் மார்ச்சுமீ 28–ந் தேதி நள்ளிரவு வரை உள்ள ஸ்டாக்குகளுக்கும் இந்த வரி உண்டு.

இந்தப் புதிய வரிகள் சம்பந்தமான விவரங்களையும் இந்த வரி வசூலிப்பதற்கு செய்யப் பட்டுள்ள ஏற்பாடுகளைப் பற்றியும் தெரிந்துகொள்வதற்கு உற்பத்தியாளர்கள், தமது பிரதேசங்களில் உள்ள மத்திய சுங்க அதிகாரிகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். உற்பத்தியாளருக்கு இந்தவகையில் சாத்யமான எல்லா உதவிகளையும் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். உற்பத்தியாளரும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### புது வருமான வரி விகிதங்கள்

நிதி மந்திரியின் புது வரிப் பிரேரணைகளின்படி வரிமானவரி விகிதங்கள் வருமாறு:—

விவாகமான ஒவ்வொரு நபருக்கும் ஒவ்வொரு ஹிந்து அவிபக்த குடும்பத்திற்கும்:

(1) மொத்த வருமானத்தில் ("சம்பாத்ய வருமானத்தில்" அனுமதிக்கும் "கழிவு" போக மீதமுள்ள தொகைமீது) முதல் 2000 ரூபாய்க்கு வரி கிடையாது.

(2) அடுத்த 3000–த்துக்கு ரூபாய்க்கு முக்கால் அணா.

(3) அடுத்த 2500 - க்கு ரூபாய்க்கு ஒரு அணா 9 தம்பிடி.

(4) அடுத்த 2500 - க்கு ரூபாய்க்கு இரண்டேகால் அணா.

(5) அடுத்த 5000-த்திற்கு ரூபாய்க்கு மூன்றேகால் அணா.

(6) மீதமுள்ள வருமானத்திற்கு ரூபாய்க்கு 4 அணா,

#### விவாகமாகாதவருக்கு

விவாகமாகாத ஒவ்வொரு நபருக்கும் பின்வரும் முறையில் வருமான வரி இருக்கும். "சம்பாத்ய வருமானத்தில்" அனுமதிக்கும் "கழிவு" போக மீதமுள்ள தொகைமீது:

(1) முதல் 1000 ரூபாய்க்கு வரி இல்லை,

(2) அடுத்த 4000-த்துக்கு ரூபாய்க்கு முக்கால் அணா.

(3) அடுத்த 2500-க்கு ரூபாய்க்கு ஒரு அணா 9 தம்பிடி.

(4) அடுத்த 2500-க்கு ரூபாய்க்கு இரண்டேகால் அணா.

(5) அடுத்த 5000-த்துக்கு ரூபாய்க்கு மூன்றேகால் அணா.

(6) மீதமுள்ள தொகைக்கு, ரூபாய்க்கு 4 அணா.

இது தவிர ஒவ்வொரு அடுக்குக்கும் வரி விகிதத்தில் 20—ல் ஒரு பங்கு சர்சார்ஜ் விதிக்கப்படும்.

**சூப்பர் வரி விகிதங்கள்**

சூப்பர் வரி விகிதங்கள் வருமாறு: தனிப்பட்ட நபர்கள், ஹிந்து அவிபக்த குடும்பம், ரிஜிஸ்டர் செய்யப்படாத கம்பெனி, மற்றும் பல நபர்கள் சேர்ந்த கோஷ்டிக்கு

வருமான வரிக்கு உள்படும் மொத்த வருமானத்தில் முதல் 20000க்கு வரி இல்லை.

அடுத்த 5000க்கு ரூபாய்க்கு 1 அணா.

அடுத்த 15,000க்கு ரூபாய்க்கு 3 அணா.

அடுத்த 10,000க்கு ரூபாய்க்கு 5 அணா.

அடுத்த 10,000க்கு 6 அணா.

அதற்கு அடுத்த 20,000க்கு 7 அணா.

அடுத்த 20,000க்கு 8 அணா.

அடுத்த 50,000க்கு 9 அணா.

மீதமுள்ளதற்கு ரூபாய்க்கு $9\frac{1}{2}$ அணா.

இந்த விகிதத்தில் இருபதில் ஒரு பங்கு சர்சார்ஜும் விதிக்கப்படும்.

---

(51-ம் பக்கத் தொடர்ச்சி)

போது நான்கு மாதங்கள் வரை சேர்த்துக் கொள்ளலாம் என்ற மற்றொரு சலுகையும் தரப்பட்டிருக்கிறது.

வரவு-செலவுத் திட்டம்பற்றிய புள்ளி விவரங்கள் தரப்படுகின்றன:—

ரெவினியூ கணக்கில், சென்னை சர்க்காரின் 1955—56-ம் ஆண்டைய புதிய வரிகள் உட்பட வருமானமும், செலவும் அடங்கிய கணக்கு இங்கு தரப்படுகிறது:—

| | |
|---|---|
| வரவு | ரூ. : 47,92,06,900 |
| செலவு | ரூ. : 49,58,17,600 |
| துண்டு விழும் தொகை | ரூ. : 1,66,10,700 |

—'நம்நாடு'

# சென்னை சர்க்கார் வரவு-செலவுத் திட்டம்

## துண்டு விழும் தொகையைச் சரிக்கட்ட புதிய வரிகள்

### மூன்றாம் படிவம் முடிய இலவசக் கல்வி

சென்னை அரசாங்கத்தின் 1955–56-ம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தை நிதிமந்திரி சுப்பிரமணியம் சட்ட சபையில் தாக்கல் செய்திருக்கிறார்.

ரெவின்யூ கணக்கில் மொத்த வருமானம் ரூ. 47 கோடி 92 லட்சம் என்றும், செலவு ரூ. 49 கோடி 58 லட்சம் என்றும், துண்டு விழும் தொகை ரூ. 1 கோடி 66 லட்சம் என்றும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

துண்டு விழும் தொகையை புதியதாக விதிக்கவிருக்கும் வரிகள் மூலம் சரிக்கட்ட அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

நஞ்செய், புஞ்செய், தோட்ட நிலங்கள் முதலிய எல்லா வகை நிலங்களுக்கும் தீர்வையில் எட்டில் ஒரு பங்கு(ரூபாய்க்கு இரண்டணா) சேர்த்து உபரி வரி விதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வரிமூலம் ரூ. 75 லட்சம் வருமானம் கிடைக்குமாம்.

புகையிலை வரி ரத்தானதிலிருந்து புகையிலைப் பொருள்களுக்கு வரி இல்லாமலிருக்கிறது; எனவே, இனிப் புகையிலைப் பொருளுக்கும் பொது விற்பனை வரி விதிக்கப்படும்.

காலணாவுக்கும் குறைவான விலையில் விற்கப்படும் சிகரெட்டுகளுக்கும் விற்பனை வரி உண்டு.

விற்று முதலில் 100-க்கு 5 சதவிகிதம் இந்த வரி விதிக்கப்படும் என்று கூறப்படுகிறது. இதன் மூலம் 50 லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்குமாம்.

சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இறைச்சி, மீன், காய்கறிகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. இப்போது வெங்காயம், உருளைக் கிழங்கு, வெற்றிலை, வாழை இலை ஆகியவற்றிற்கும் விற்பனை வரி விதிப்பினின்றும் விலக்களிக்கப்படுகிறது.

ரூ. 1,200 வரை வருட வருமானம் பெறும் எல்லோரையும், சாதி வகுப்பு வேற்றுமையின்றி ஏழைகளாகப் பாவித்து அவர்களது குழந்தைகளுக்கு முதல் வகுப்பிலிருந்து மூன்றாவது படிவம் முடிய பள்ளிக்கூடங்களில் சம்பளம் வசூலிக்கக்கூடாது என்பது குறிப்பிடத்தகுந்த முக்கியமான சலுகையாகும்.

இதனால் பள்ளிகளுக்கு ஏற்படும் சம்பள வசூல் நஷ்டத்தை சர்க்கார் ஏற்றுக்கொள்வர் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சர்க்கார் ஊழியருக்கு இது வரை ஓய்வு நாட்களை மூன்று மாதங்கள் வரை சேர்த்துக்கொள்ளலாம் என்றிருந்ததை இ

(50-ம் பக்கம் பார்க்க)

## சென்னை இராஜ்ஜிய எயிடட் எலிமென்டரி பாடசாலை மானேஜர்கள், ஆசிரிய மானேஜர்கள் மாநாடு ஞாயிறு 27—3—55

# வரவேற்புக் கமிட்டி அறிக்கை

---

மானேஜர்கள், ஆசிரிய மானேஜர்கள் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கும் ஜில்லாக்களில் மகாநாட்டிற்குத் தாலுக்கா வாரியாக குறைந்தது நான்கு பிரதிநிதிகளை, மகாநாட்டின் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுத்து அனுப்பக் கேட்டுக்கொள்கிறோம். தாலுக்கா வாரியாக ஆசிரிய மானேஜர்கள் சங்கங்கள், மானேஜர்கள் சங்கங்கள் இல்லாத இடங்களில் தனிப்பட்ட (Mission, Nonmission) பாடசாலை மானேஜர்களும் மகாநாட்டிற்குப் பிரதிநிதிகளாக அல்லது வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்களாகக் கலந்து கொள்ளலாம்.

வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்களுக்குக் கட்டணம் ரூபாய் 2

சாதாரண பிரதிநிதிக் கட்டணம் ரூபாய் 1.

இந்தத் தொகையை மார்ச்சு மாதம் 22—ஆம் தேதிக்குள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு M. O. மூலம் அனுப்பி வைக்கவும்.

பிரதிநிதிகளும் வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்களும் மார்ச்சு 26—ஆம் தேதி சனிக்கிழமை மாலை 6 மணிக்குள் சென்னை வந்து சேர்ந்துவிட வேண்டும். டெலிகேட்டுகள் சென்னையில் தங்க Park Town நைநியப்ப நாய்க்கன் தெருவிலுள்ள அன்னதான சமாஜத்தில் வசதி செய்யப்பட்டிருக்கிறது. சனி இரவு (26–3–55) 9 மணிக்கு மெமோரியல் ஹால் அருகாமையிலுள்ள எட்டியப்ப நாயக்கர் வனனிய சங்கம் பாடசாலையில் (P. T. Madras) விஷயாலோசனைக் கமிட்டி கூடும். அந்தக் கமிட்டியில் மகாநாட்டிற்குக் கொண்டுவரப்படும் தீர்மானங்களைக் குறித்து விவாதிக்கப்படும். ஆதலால் பிரதிநிதிகள், தாங்கள் மகாநாட்டிற்குக் கொண்டுவர இருக்கும் தீர்மானங்களை 24–3–55 (வியாழக் கிழமை)குள் சென்னை சேரும்படி கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.

இந்த மகாநாட்டில் கிருத்துவ மிஷனரிகளால் (Catholic or Protestant) அல்லது கமிட்டிகளால் நடத்தப்படும், எல்லாவித ஆரம்பப் பாடசாலை மானேஜர்களும், நிர்வாகிகளும் கலந்துகொள்ளலாம்.

இந்த மகாநாடு சிறப்பாக நடைபெறுவதற்கு, பண வசதியுள்ள மானேஜர்கள் தங்களுக்கு இஷ்டப்படியான நன்கொடை அனுப்பலாம்.

பெருவாரியாக மானேஜர்கள் இம் மகா நாட்டில கலந்து கொண்டு வெற்றிகரமாக மகாநாட்டை நடத்திவைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

மகாநாட்டிற்கு குறுகிய காலம் இருப்பதால், இந்த பத்திரிகை யின் விளம்பரத்தையே மகாநாட்டின் அழைப்பாக வைத்துக் கொண்டு, மகாநாட்டில் பெருவாரியாகக் கலந்துகொள்ளவும். மகா நாட்டைப்பற்றிய இன்னும் விளக்கமான நிகழ்ச்சிகள், பிரதிநிதி கட்டணங்கள் சேர்ந்ததும் அனுப்பிவைக்கப்படும்.

P. வீரராகவன், N. A. நடேச முதலியார்.
காரியதரிசிகள்.

பணம் அனுப்பவேண்டிய முகவரி:—

P. வீரராகவன்,
காரியதரிசி, (சென்னை இராஜ்ஜிய
மானேஜர்கள் மகாநாடு.)
94/95, புதுத் தெரு, மண்ணடி, மதருஸ்-1.

---

## Madras State Aided Ele., School Managers' and teacher, Managers' Conference.

சென்னை இராஜ்ஜிய எயிடட் எலிமெண்டரி பாடசாலை
மானேஜர்கள், ஆசிரிய மானேஜர்கள் மகாநாடு.

இடம்: சென்னை C. L. S. மெமோரியல் ஹால், பார்க் டவுன்.

தேதி: ஞாயிறு 27—3—55.

தலைவர்: டாக்டர் பி. வரதராஜுலு நாயடு, M.L.A.

திறப்பாளர்: கனம் பிரதம மந்திரி
திரு. K. காமராஜ நாடார், M. L. A. 9 A. M.

வரவேற்புக் கமிட்டித் தலைவர்: திரு. A. R. சேஷாசலம் 9-30 A.M

தலைவர் முன்னுரை: டாக்டர் பி. வரதராஜலு நாயடு M. L. A.
10 A. M.

சொற்பொழிவுகள்: (விவரம் பின் வெளிவரும்) 11 A. M.
12 A. M. பகல் நிகழ்ச்சி முடிவு.

மாலை நிகழ்ச்சி

**தீர்மானங்கள் பகல் 2 மணி முதல்—5–30 மணி வரை.**
**6 மணிக்கு மகாநாடு முடிவு.**

P. வீரராகவன்,
*ஆசிரியர், "ஆரம்பக்கல்வி"*
N. A. நடேச முதலியார்,
*காரியதரிசிகள்.*

## *சென்னை ஜில்லா எயிடட் ஆரம்பப்பள்ளி மானேஜர்கள் சங்கம்*

9-3-55 புதன் மாலை 5-30 மணிக்கு ஆரம்பக் கல்வி ஆசிரியர் மேற்படி சங்கத்தின் தலைவர் பி. வீரராகவன் அவர்கள் தலைமையில் மேற்குறித்த சங்கத்தின் பொதுக் கூட்டம் 94/95 புதுத்தெரு, G. R. C. பாடசாலை கட்டிடத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டன.

1. 27-3-55 ஞாயிறு சென்னை இராஜ்ஜிய உதவி பெறும் ஆரம்பப்பள்ளி மானேஜர்கள், ஆசிரிய மானேஜர்கள் கொண்ட மகாநாட்டை ஒன்றை கூட்டுவதென்றும், அதற்கு டாக்டர் திரு. பி. வரதராஜுலு நாயுடு அவர்கள் தலைமை வகிப்பது என்றும், திரு. ஏ. ஆர். சேஷாசலம் அவர்கள் வரவேற்புக் கமிட்டி தலைவராக பணியாற்ற வேண்டுமென்றும் தீர்மானிக்கப் பட்டது.

2. இம் மகாநாட்டை வெற்றிகரமாக நடத்த திருவாளர்கள் ஏ. ஆர். சேஷாசலம், சீனிவாசன், வேணுகோபால், ஜகதீசன், T. V. சுந்தரம், D. அரங்கநாதன், P. T. சீனிவாசன், மிஸ். சாமுவேல் அம்மையார், தலைவர் P. வீரராகவன், காரியதரிசி N.A. நடேச முதலியார் கொண்ட குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

3. அளகப்ப செட்டியார் கமிட்டியின் கேள்விகளுக்கு பதில் அளிக்க 9—பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

4. இம் மாகாண மகாநாட்டிற்கு திருவாளர்கள் N. A. நடேச முதலியார், P. வீரராகவன் காரியதரிசிகளாக இருந்து பணியாற்ற தீர்மானிக்கப்பட்டது.

5. R. o. c. No. 2225—B-7—51-52-dated 17-6-53;

*டைரக்டர் சுற்றறிக்கையின்படி ஆசிரியர்களை, பாடசாலையில் வைப்பதிலும், எடுப்பதிலும் உள்ள பாடசாலை மானேஜர்கள் உரிமையை, கல்வி அதிகாரிகள் எடுத்துக்கொண்ட காரணத்தினால், பாடசாலைகளின் நிர்வாகம் திறமையாகவும், ஒழுங்காகவும் நடக்க பல சிக்கல்கள் ஏற்பட்டு வருகிறது. ஆகையால் உடனடியாக அந்த சுற்றறிக்கையை ரத்து செய்யும்படி இச்சங்கம் அரசாங்கத்தை கேட்டுக் கொள்ளுகிறது.*

The association regrets to bring to the notice of the Government that teachers do not pay their full attention to their duties in Schools since the rights of managers under Rule 13 rules for recognition have been taken away and even in just cases on the part of managers the department indiscriminately passes orders in favour of Teachers and always one sided.

Hence the managers are not able to have disciplined and well controlled staff and keep up old level of efficiency. Hence the proceedings R. O. C. No. 2225-B 7/51-52 dated 17-6-'53 may be withdrawn.

---

## பொன் மொழிகள்

*ஏழை மக்களுக்கு எவனொருவன் தொண்டு செய்கின்றானோ அவனே உண்மை பக்தன். அவனுடைய உள்ளமே ஆண்டவன் தேடிச்சென்று அமரும் அரியாசனம்.*

—*காந்தியடிகள்*

*உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் நண்பனைவிட வெளிப்படையாக உள்ள பகைவனே ஆயிரம் மடங்கு சிறந்தவன்.*

—*நெப்போலியன்*

*குறைந்த அளவு தீமையும் கூடிய அளவு நன்மையும் விளையும்படி வாழ்வதே சிறந்த வாழ்வாகும்.*

—*ரோமன் ரோலந்து*

*நம்முடைய அவயவங்களின் நிலைமைகள், நம்முடைய மனச்சாட்சியின் நிலைமைக்கு ஒத்திருக்கின்றன.*

— *அந்தோனின்.*

# "அற நெறி"

## ஒரு சிறந்த மாதப் பத்திரிகை

இப்பத்திரிகை வாழ்க்கை, உணவு, வைத்தியம், ஒழுக்கம், கற்பு, விஞ்ஞானம், சமயம் முதலிய கட்டுரைகளைத் தாங்கி தமிழ்ச் சுவையோடு மறைந் தழியும் நுட்பங்களை விளக்கி வருகின்றது.

இது கற்றவரும், மற்றவரும், பத்திரிகை ஆசிரியரும், பத்திரிகை அபிமானிகளும், பாவலரும், நாவலரும் விரும்பும் வண்ணம் இலக்கிய சுவையோடு எட்டு மாத காலமாக தமிழகத்தே உலாவி வருகின்றது.

பல நூல்களைப் படிப்பதின் பயனை இதில் உணர வாய்ப்பு இருக்கிறது. தாங்கள் அனைவரும் சந்தாதாரராகச் சேர்ந்து ஆதரித்துப் பயன் பெறலாம்.

மாதிரி பிரதி 0-5-0 ஆண்டு சந்தா 3-0-0

அற நெறி அலுவலகம்,
75, நைனியப்பன் தெரு,
மண்ணடி, சென்னை—1.

ஆசிரியர்,
சிவ. முருகசிவம்
தமிழ்ப் புலவர்.


## தலைக்கு 3 ரூபாய்

கல்விக்காக 1950–51 ஆண்டுக் கணக்குப்படி இந்திய சர்க்கார் செலவிட்ட மொத்தத் தொகை 122 கோடி! அதாவது ரூ. 1120259463.

ஒரு லட்சம் ஜனத்தொகைக்கு 314069 ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது என்று கணக்கிடப்படுகிறது. அதன்படி சுமார் சராசரி தலைக்கு 3 ரூபாய் வீதம் இந்தியக் குடிமகன் ஒவ்வொருவருக்கும் செலவாகியிருக்கிறது!

சரியான புள்ளி விபரப்படி ஒரு ரூபாய்கூட வராது. ஏனென்றால், மொத்தச் செலவில் 57·1சத வீதத்தைத்தான் சர்க்கார் கஜானா செலவு செய்திருக்கிறது. லோகல் போர்டு நிதியிருப்புகளிலிருந்து 11·2 சதவீதமும் மாணவர்கள் கொடுக்கும் பீஸ் தொகையிலிருந்து 20 சதவீதமும் இதர வழிகளில் 11·7 சதவீதமும் செலவாகியிருக்கிறது.

இந்தியாவில் மொத்தத்தில், ஆரம்பப்பள்ளி முதல் கல்லூரி வரை 280217 ஸ்தாபனங்கள் இருக்கின்றன.


Edited, Printed and Published by P. Veeraraghavan at the 'Venkatesan Press' 94/95 New St. Mannady, Madras-1.

## இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

M. விவேகானந்தா, B. Sc., L.T.,)

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 5 0 | ... | ... |
| நான்காம் வகுப்பு | 0 7 0 | 18 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 8 0 | 18 | 19–5–'54 |

## புதிய தேச ஆட்சி முறை

(D. சிவசங்கரராவ், B A ,L.T.)

| | | | |
|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 5 0 | 11 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 7 0 | 8 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 8 0 | 8 | 19–5–'54 |

## புதுமுறை சங்கக் கணிதம்

K. வீராசாமி, B.A.,L.T ,

| | | | |
|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 8 0 | 14 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 10 0 | 14 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 12 0 | 14 | 19–5–'54 |

## நம் நாட்டு வரலாறு

M. தக்ஷிணாமூர்த்தி, B. A., B. .T

T. S. உமாபதி, M. A., L. T.,

| | | | |
|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 5 0 | 11 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 7 0 | 8 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 9 0 | 10 | 19–5–'54 |

## சிறுவர் பூகோளம் (Tamil)

T. S. உமாபதி, M. A., L. T.

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0 5 0 | 13 | 19–5–'54 |

V K. சேஷாத்திரி, B , A.,L. T.

| | | | |
|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 7 0 | 12 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 10 0 | 12 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 12 0 | 12 | 19–5–'54 |

**Mother India English Reader Primer - I 0 5 0**

## பாலுர பூகோளமு (Telugu)

| | | | |
|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | 0 12 0 | 12 | 19–5–'54 |

Regd No. M 5018

## உயர்தர ஆரம்பப் பாடசாலைகளுக்கு

(For Higher Ele Schools)

### வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

(Vidwan- V. Subramaniam)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 0 | 12 | 0 | 23 | 19-5-'54 |
| ஏழாம் வகுப்பு | 0 | 14 | 0 | 41 | 19-5-'54 |

### புதுமுறை சங்கக் கணிதங்கள்

(V. K. Seshadri, B. A., L. T., & V. S. Leela B. A., B. T.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1 | 2 | 0 | 15 | 19-5-'54 |
| ஏழாம் வகுப்பு | 1 | 4 | 0 | 15 | 19-5-'54 |
| எட்டாம் வகுப்பு | 1 | 4 | 0 | 16 | 19-5-'54 |

### சமூக நூல்

(T. S. Umapathy, M. A., L. T.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1 | 4 | 0 | 38 | 19-5-'54 |
| ஏழாம் வகுப்பு | 1 | 8 | 0 | 38 | 19-5-'54 |
| எட்டாம் வகுப்பு | 1 | 8 | 0 | 38 | 19-5-'54 |

### அநுமான முறை இலக்கணமும் உரை நடை ஆக்கமும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 0 | 12 | 0 | 41 | 19-5-'54 |
| ஏழாம் வகுப்பு | 0 | 12 | 0 | 41 | 19-5-'54 |
| எட்டாம் வகுப்பு | 0 | 12 | 0 | 41 | 19-5-'54 |

Printed at the Venkatesan Press, Madras—1.